# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவா யாண்டு ௲௯௯௧ | மலர் |
| --- | --- | --- |
| | சார்வரி, வைகாசி | |
| ௩௪ | 1960 மே, ஜூன். | ௨ |


## கண் கொடுத்த வனிதம்


வித்துவான், சி. கோவிந்தராசனார்,

விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.


தமிழகத்தில் சமயத்துறையில் சிற்பம், ஓவியம், இசை, கூத்து ஆகிய நுண் கலைகள் வளர்க்கப்பட்டு வந்துள்ளன என்பதை, வரலாறுகளும் காலவெள்ளத்துக்கும் சமயவெறிச் சூறுவளிக்கும் இலக்கானவை போக எஞ்சியுள்ள கோயில்களும் அவற்றிலுள்ள கல்வெட்டுக்களும் நன்குணர்த்துகின்றன. எஞ்சிய கோயில்கள் இடைக்காலத்தில் சீர்திருத்தப் பெற்றும் காலப்போக்கில் காப்பவரின்றித் தன்னிலையிழந்து திரிந்தும் அழிந்தும் நாடெங்கும் கிடக்கின்றன. இவ்வாறு வரலாறு கொண்டு வாழ்விழந்து நிலைகுலைந்து வருகின்ற கோயில்களுள் ஒன்றே கண்கொடுத்த வனிதம் என்னும் சிற்றூரில் யான் ஆய்ந்து கண்ட நயனவரதேசுவரர் என்னும் பெயருடைய சிவன்கோயிலாகும். இன்று இக்கோயில் இடிந்தும் சரிந்தும் புதைந்தும் புதரடைந்தும் கிடக்கின்றது.

தஞ்சையிலிருந்து திருவாரூர் செல்லும் புகைவண்டிப் பாதையில், திருமதிக்குன்னம் என்னும் பெயருடைய புகைவண்டி நிலையத்துக்குத் தெற்கே மூன்று கல் தொலைவில், பாண்டவாய் ஆற்றின் வடகரையில் இச்சிற்றூர் உள்ளது.

கோயில், ஊரின் நடுவே கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பெரிய அளவில் எழுப்பப்பட்டுள்ள இச்சிவன் கோயிலுக்கு இரண்டு திருவாயில்கள் அமைந்துள்ளன. முதற் கோபுரமாகிய தோரணத்திருவாயில் ஐந்து மாடங்களோடு திகழ எழுப்பப்பட்டிருப்பினும், பல்லாண்டுகளாகக் காப்பவரின்றி நின்றமையான் புதரடைந்து சிதைந்து நிற்கின்றது. இதன் உச்சித்தளத்தில் பறவைகளின் வழியே வித்திடப்பட்ட ஆலொன்று தோன்றிப்

பெருமாமாகி வானோக்கி வளர்ந்து நிற்கின்றது. அடுத்துள்ள திருமாளிகைத் திருவாயில் மூன்றடுக்குள்ள நிலையமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். இன்று அவ்வடுக்குகள் சிதைந்தழிய பல வெடிப்புக்களும் அவற்றில் பல்வகைச் செடிகொடிகளும் மல்கிப் பசுமையோடு காட்சிதர அதில் மாட்சியுடன் பெரிய பாம்புகள் நிலைத்து வாழ்கின்றன.

இத்திருக்கோயிலுக்கு முன்னர்த் திருக்குளமும் அமைக்கப் பட்டுள்ளது. கோயிலுக்கு இரண்டு பெரிய திருச்சுற்றுக்கள் உயர்ந்த மதில்களுடன் இருந்ததற்குரிய சுவடுகள் தெளிவாகத் தெரிகின்றன. மதிற்சுவரின் மற்றைய பகுதிகள் பல இல்லங்களில் இரண்டறக்கலந்து விட்டன போலும்! இரண்டாவது வாயிலைச் சார்ந்து மகாமண்டபம் உள்ளது. கருங்கற்றிருப் பணியாகவுள்ள இப்பகுதியும் பழுதடைந்து புதரடைந்து கிடக்கின்றது. அடுத்துள்ளது முகமண்டபத்தோடு கூடிய கருவறையாகும். பிற்காலச்சோழர் எழுப்பிய கற்றளிகளின் சிறப்பம்சமாகுள்ள கருவறையின் அடிப்படை குலையவில்லையேயன்றிச் சுவரின் மேற்பகுதியாகிய பஞ்சரம், கபோத பட்டிகா, துலாநிலை, கர்ணகூடம் ஆகிய சிற்பவேலைப்பாடுடைய பகுதிகள் கட்டுவிட்டுப் பிதுக்கமடைந்து வீழ்ந்து வருகின்றன. கருவறை விமானமும் சிதைவுற்றுப் புதரடைந்து வளரும் சில மரங்களுக்கு நிலைக்களனாக உள்ளது. இச்சிவன் கோயிலில் இப்பொழுது காண்பதற்குரிய பகுதிகளே மேலே கூறப்பட்டவைகளாகும். இவையன்றிக் கோயிலின் அங்கங்களாக விளங்கிய நூற்றுக்கால் மண்டபம் நிருத்த மண்டபம் போன்ற பகுதிகள் இடிந்து புதைந்து மண்மேடாகவே காட்சியளிக்கின்றன.

தோரணத்திருவாயிலின் தென்புறப் பகுதியில் கோயிலின் எல்லைக்கு உட்பட்டதாக மேற்கு நோக்கிய நிலையில் ஒருகுறுகிய கோயில் பழுதடைந்து நிற்கிறது. இதன் கருவறைப் பகுதியாகவுள்ள இடத்தில் ஐந்தடி உயர அளவில் கற்றூண்போல இலிங்கம் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விலிங்கம் எதன் பொருட்டு உண்டானது? பெயர் என்ன? என்பதொன்றும் தெரிந்திலது.

யான் இக்கோயிலை முதன்முறையாக, 14–11–59ல் சென்று கண்டேன். இவ்வளவு பழமையான கோயிலில் கல்வெட்டுகள் இல்லாமல் இருப்பதற்கில்லை என்ற நோக்குடன் ஆராய்ந்தேன். முதலில் ஒன்றும் புலனாகவில்லை. அதிலிருந்து ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் சென்று முயன்றேன். மூன்ருவது முறை யான் சென்று கோயிலின் பல பகுதிகளைத் துருவிக்

கொண்டிருக்கும் போது, கோயிலின் வடக்குத் திருவீதியில் வாழ்பவரும் இளைஞருமாகிய திரு. சு. நடராசன் என்பவர் எனக்கு உதவ முன்வந்து என் விருப்பப்படிக் குறிப்பிட்ட இடங்களை அகழ்ந்து பார்க்க உதவினார்கள். சுருங்கக்கூறின் மகாமண்டபத்தின் இருபுறமும் அழிந்து மேடிட்டுக் கிடந்த பகுதிகளை இரண்டடிமுதல் நான்கடி வரை அகழ்ந்தபோது அடிப்படை வரிசைகள் புலப்பட்டன. அவற்றில் மிகத்தெளிவான கல்வெட்டுகள் இருக்கக்கண்டேன் [1]. இவ்வாறு யான் கண்டு பிடித்த கல்வெட்டுகளுள் வடபுறத்தில் கிடைத்த கல்வெட்டு பாண்டிய மன்னன், திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவருடையதாகும். எழுத்துக்கள் தெளிவாகவும் பழுதடையாமலும் இருக்கின்றன. முப்பத்திரண்டடி நீளமுள்ள வரிகள் பதின்மூன்றுடைய இப்பெரிய கல்வெட்டைச் சுவடுமாறாமல் படியெடுத்துள்ளேன். அடுத்துத் தென்புறத்தில் அகழ்ந்து கண்டுபிடித்த கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கனுடையதாகும். இக்கல்வெட்டு இவனது ஆட்சியாண்டு ஏழில், அதாவது கி-பி 1185-ல் எழுந்ததாகும். இக்கல்வெட்டும் மிகத்தெளிவாக உள்ளது. ஒவ்வொரு வரியும் இருபத்துநான்கடி நீளமுள்ளதாகப் பத்துவரிகளில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. இரண்டு கல்வெட்டுகளிலும் பல துண்டுநிலங்களை ஆங்காங்கு விலைக்குப் பெற்று, கோயிலுக்கு இறையிலிதேவதானமாக அளிக்கப்பெற்ற செய்தியே கூறப்பட்டுள்ளது. ஆயினும், பெற்ற நிலங்களுக்குரியாரின் பெயர்களும், பெற்றவர்களின் பெயர்களும் நிலங்களுக்குரிய எல்லைப் பகுதிகளின் பெயர்களும் வரலாற்றாராய்ச்சிக்குரியதாக அமைந்துள்ளன.

இக்கோயிலின் கருவறைப் பகுதியிலிருந்து பல திருமேனிகளும் படிமங்களும் அண்மையில் கிடைக்கப் பெற்று அவை ஊர் பஞ்சாயத்தாரின் கண்காணிப்பிலும் பரம்பரை அர்ச்சகரது பொறுப்பிலும் இருக்கின்றன. அவ்வுலோகச் சிலைகளுள் நான்கடி உயரமுள்ள ஆடவல்லான், மூன்றரை அடி உயரமுள்ள பிச்சதேவர், சோமாசுகந்தர், உமாதேவி, ஆகிய திருவுருவங்களும் சிறுத்தொண்டர், திடிவெண்காட்டுநங்கை, சீராளதேவர், சந்தனத்தார் ஆகியோரின் அழகிய படிமங்களும் சிற்பநுட்பம் பொருந்தியவைகளாகும். அழிந்து கிடக்கும் பகுதியிலிருந்து, தமது கழுத்தை அரிவாளால் அரியத்தொடங்கும் பாங்கில் அரிவாட்டாய நாயனார் திருவுருவமொன்று புடைப்புச் சிற்பமாகக் கிடைத்துள்ளது. இச்சிற்பம் பிற்காலப் பாங்குடையதாகத் தெரிகிறது.

---

1. இச்செய்தி 8—5—60-ல் நாளிதழ்களில் வெளிவந்துள்ளது.

உலோகச் சிலைகளுள் பிச்சதேவரின் திருமேனி உச்சநிலையில் அழகு பெற்று விளங்குகின்றது. பிறப்பு இறப்பு இல்லாத சிவபெருமானின் அருள் தோற்றத்தினைக் கற்பனைக் கண்ணால் சிற்பிகள் கண்டு, அவற்றைப் பல்வேறுபட்ட மூர்த்திகரமாக வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றுள் தாருகாவனத்திருந்த தவத்தோரின் மனைவியர் கொண்ட முனைப்பை (கர்வத்தை) அடக்கச் சிவபெருமான் பிச்சதேவர் உருவில் வந்தார் என்றும் அவர் தம் திருமேனியழகில் மயங்கிய அம்மகளிர் நிறை யழிந்தனர் என்றும் புராணக்கதை கூறும். அக்கதைக்கும் கற்பனைக்கும் வடிவு கொடுத்தான் ஒரு சிற்பி. சிற்பத் திறனுய் உருப்பெற்ற பிச்சதேவர் திருமேனியின் ஒவ்வொரு பகுதியும் காட்சிக்கு விருந்தாகி நம்முடைய கருத்தை ஈர்க்கின்றது. பிச்சதேவர் திருமேனியின் இலக்கணத்தை,

"அடியில் தொடுத்த பாதுகையும்
அசைந்த நடையும் இசைமிடறும்
வடிவில் சிறப்ப நடந்தருளி
மூழை ஏந்தி மருங்கணைந்த
தொடியில் பொலிதோள் முனிமகளிர்
சுரமங் கையரை மயல்பூட்டி
படியிட்டு எழுதாப் பேரழகால்
பலிதேர் பகவன் திருவுருவம்"

என்னும் பழம்பாடல் விளக்குகின்றது. மற்றும் அப்பர்பெருமான் தமது திருப்பதிகத்தினுள் "விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை தரித்ததோர் கோல கால பயிரவனுக" என்றும் பிச்ச தேவரின் வடிவை விளக்கியுள்ளார் மற்றும் அவரே

அருவ ராததோர் வெண்டலை யேந்திவந்
திருவ ராயிடு வார்கடை தேடுவார்
தெருவெ லாம்உழல் வார்செம்பொன் பள்ளியார்
ஒருவர் தாம்பல பேருளர் காண்மினே!

என்றும் நமக்குப் பிச்சதேவரின் திருமேனிக்கு விளக்கங்கூறி அறிமுகஞ் செய்கிருர். அத்தகைய எழிலோடு கூடியதும் கண் கொடுத்த வனிதம் சிவன் கோயிலில் கிடைத்துள்ளதுமான பிச்ச தேவரின் திருமேனி ஒவ்வொருவரும் நேரில் காணத்தகும் சிறப் புடையதாகும். பிச்சதேவருடன் கிடைத்துள்ள ஆடவல்லான் திருமேனியின் அழகைப் பற்றிச் சிறிது கூறுதல் நன்றும்.

இறைவனின் ஆற்றலைப் பல்வேறு தோற்றங்களில் அமைத்த சிற்பிகள், சொல்லால் விளக்க முடியாத ஒரு சிறந்த தத்துவத்தை யும் உருவாக்கினர். ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லானை ஆடவல்ல பெருமானாகக் கற்பனையில் உருவாக்கி வெற்றி கண்டவர்கள் நம் தமிழகச் சிற்பியரேயாவர். உலோகத்தில் வார்க்கப்பட்டிருக்கும் சிற்பத்தில் எத்தனையோ நுண்மைகளைச் சிற்பி அமைத்திருக்கிறான். ஆனந்தத் தாண்டவம் என்று கூறப் பெறும் இயல்புடையதாக இத்திருமேனி விளங்குகின்றது. சாத்திரம் சமயம் கலை எல்லாம் ஒன்றாய் இணைந்து தத்துவத் தோற்றமாய், குனித்த புருவமும் குமிண் சிரிப்பும் விரித்தசடையும் பவளமேனியும் எடுத்த பொற்பாதமும் கொண்டு இலங்கும் ஆட வல்லானின் அஞ்சலென்னும் கரத்திலே ஒரு குறிப்பையும் அடக்கி வைத்துள்ளான் தமிழகச் சிற்பி. திருவாசி உட்பட நான்கடி உயரமுள்ள இவ்வானந்தத்தாண்டவத் திருமேனியையும் பிச்சதேவர் திருமேனியையும் நேரிற் காண்போர் வியவாமலிரார்.

இத்தகையதாகப் பழமையும் கலைநுட்பமும் சிலைகளும் சிறக்க விளங்கி நின்ற இச்சிவன் கோயில் இன்று தன்னிலை கெட்டுத் தாழ்ந்து கிடக்கின்றது. கல்வெட்டிலுள்ள செய்திப்படி இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன், "சயதுங்கச்சதுர் வேதிமங்கலத்துப் பிடாகை, ஆலத்தாங்குடியில் எழுந்தருளுவித்த புகழாபரணீசுவரமுடையார்" என்று தெரிகின்றது. ஆயினும் இப்பொழுது இப்பகுதி "கண்கொடுத்தவனிதம்" என்றும் இறைவனின் திருப்பெயர் நயனவரதேசுவரர் என்றும் கூறப் பெறுகின்றது.

இங்குப் புதைந்து புதரடைந்து கிடந்தபகுதிகளை மிகமுயன்று நான்கடி அளவுவரை நிலத்தை அகழ்ந்து யான் புதிதாகக் கண்டு படியெடுத்துள்ள கல்வெட்டுகள் மூன்றாகும். கல்வெட்டுகள் மிகப்பெரிய அளவுடையதாக இருப்பதால் அவை பற்றிய ஆய்வுரையுடன் கல்வெட்டுகள் அனைத்தையும் முழுவடிவில் அடுத்து வெளியிட விழைந்து இக்கட்டுரையில் இன்றியமையாத பகுதிகளிற் சிலவற்றைமட்டும் சேர்த்துள்ளேன்:—

மகாமண்டபத்தின் தென்புறம் அகழ்ந்து கண்ட கல்வெட்டின் முதற்பகுதி :—

கல்வெட்டு-1

வரி-1 ஸ்வஸ்திஸ்ரீ புயல்வாய்ப்ப வளம்பெருக பொய்யாத நான்மறையின் செயல்வாய்ப்ப திருமகளுஞ் செயமகளுஞ் சிறந்துவாழ வெண்மதி பொற்குடை விளங்க வேல்வேந்த

ரடிபணிய மண்மடந்தை மனங்களிப்ப மனுநீதி தழைத்தோங்கச் சக்கரமுஞ் செங்கோலுந் திக்கனைத்துஞ் செல நடாத்திக் கற்பகால(ம்) புவிகாப்பப் பொற்பமைந்த முடிபுனைந்து செம்பொன் வீரஸிம்ஹாஸனத்துப் புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பற்மரான

2 திரிபுவனச் சக்கரவர்த்............ஸ்ரீ......ரா...ஜந்திர தேவர்க்கு யாண்டு ஏழாவது மேஷ நாயிற்று அபர பக்ஷத்து துவாதசியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சதையக்கினுள் அருமொழிதேவ வளநாட்டு மங்கல நாட்டு பிர்மதேயம் ஸ்ரீ ஜயதுங்கச் சதுர்பேதிமங்கல புரப் பிடாகை ஆலத்தாங்குடியில் நல்லூருடையான் இராமன் ஸ்ரீ கயிலாசமுடையான் எழுந்தருளுவித்த உடையார் புகழாபரணீஸ்வரமுடையாருக்கு இக் கோயிலில் ஆதிசண்டேசுரதேவர் திருநாமத்தில் இந்நல்லூருடையான்.

3 இராமன் ஸ்ரீ கயிலாஸமுடையான் பலர்பக்கலும் விலை கொண்டு விட்ட நிலத்துக்கு பிரமாணப்படி பார்த்து வாசி திருமாலிருஞ்சோலை திருப்புல்லாணி பட்டனும் இவன் தம்பி திருநாடுடையான்பட்ட.......... ...பக்கற் கொண்டு வுட்ட குழி ஐம்பதும்....................

பிற்காலச்சோழர் சரித்திரம் பகுதி II பக்கம் 110, 171 ஆகியவற்றில் திரு. பண்டாரத்தாரவர்கள் கூறியுள்ள ஆராய்ச்சியுரையைக் கொண்டும், தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி ஐந்து. கல்வெட்டு எண்—162, 1359 ஆகியவற்றிலுள்ள மெய்க்கீர்த்திகளைக் கொண்டும் இக்கல்வெட்டு மூன்றும் குலோத்துங்கனுடையதென்று தெரிகிறது. கல்வெட்டின் எஞ்சிய எட்டுவரிகளில் புகழாபரணீஸ்வர முடையார்க்கு இறையிலி தேவதானமாக நிலப்பகுதிகள் பலரிடம் விலைக்கு வாங்கி விடப்பட்ட செய்திகள் கூறப்பட்டுள்ளன.

மகாமண்டபத்தின் வடபுறம் அகழ்ந்து கண்ட கல்வெட்டின் முதற் பகுதி :—

கல்வெட்டு-2

வரி-1. ஸ்வஸ்திஸ்ரீ அருமொழிதேவ வளநாட்டு மங்கலநாட்டு பிர்மதேய மாங்யதரன............ஜயதுங்க சருப்பேதி மங்கலத்துப் பிடாகை ஆலத்தாங்குடியில் உடையார் .........................ழாபரணீஸ்வரமுடையார் கோயில்

## வயமான்

வித்துவான், கா. சண்முகம், மு (ன்) னியூர், தஞ்சை.

சங்க காலத் தமிழர் புறவாழ்வினும் அகவாழ்வையே மிகவும் விரும்பினர் என்பதைச் சங்க இலக்கியங்களைக் கற்றோரும் கற்போரும் "கையுறு நெல்லியங்கனியின்" அறிவர். பழந்தமிழ் மக்கள் அகத்திணையைக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என ஐவகையாகப் பகுத்து ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு ஒழுக்கத்தைக் கொண்டு சிறந்த சீருடன் எண்டிசையோரும் போற்ற இனிதே வாழ்ந்தனர்.

முழுமுதல் இலக்கணநூலாம் தொல்காப்பியத்தில் உள்ள

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

---

38-ஆம் பக்கத்தொடர்ச்சி.

ஆதி சண்டேஸ்வர தேவர் கன்மிகளோம் இந்நாயனார் கோயில் நாச்சியார் தேவத தம்பிராட்டியார்க்குப் பலர் பக்கலும் சண்டேஸ்வரப் பெருவிலை கொண்டும் பட... ர்களா.........ம் தருநாம..............ணியான் கொமாற பன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவருக்கு யாண்டு ரு............இவ்வூர் பாரத்துவாசி திருமாணித்தன்

2 நாராயண பட்டனும் கெசவன் பெரும்புறக்கடல் பட்டனும்............பக்கல் விலை கொண்ட இவ்வூர் பிடாகை ஆலத்தாங்குடி பாண்டவாய ஆற்றுக்கு வடகரைப்பட்ட கொல்லைகளில் நெல்லைக்கொல்லை என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்குகீழ்பாற்கெல்லை பூதமங்கல வனபிரமதேசத்துக்கு மேற்கு தென்பாற்கெல்லை கொளகன்...இந்நிலத்துக்கு வடக்கு மேல்பாற்கெல்லை ............பட்டன் நிலத்துக்கு கிழக்கு வடபாற்கெல்லை கொளகின்றூர் நிலத்துக்கு தெற்கு இந்நான்கெல்லைக்கு

(இடையே 3–12 வரை பத்து வரிகள் உள்ளன)

13 வடக்கடைய ரு-ம் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு....... விசையாலையபுரத்து பிடவாரிபுகுந்த பாணலூர் கிழவன் இராமாண்டானை மருதாண்டான் தந்த நிலனூர் பழநிலம் உ

வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

என்னும் நூற்பாவினை ஆராயின் நான்கு திணைகளே உள. பாலைத்திணையைக் கூறாமையின் குன்றக் கூறல் என்னும் குற்றத்தின் பாற்படும் என்று நினைப்பின் குற்றமாகாது. ஏனெனின் இந்நூற்பாவில் தொகுத்துக் கூறுவிடினும் இவ்வாசிரியரே பிறஇடங்களில் நடுவுநிலைத் திணை, நடுவண் ஐந்திணை, வாகைதானே பாலையது புறனே, அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்று கூறியதனாலும் பாலை என்பது தனிநிலமன்மையானும் குறிஞ்சியும் முல்லையும் தந்நிலை மாறியே பாலையாக மாறியது என்று இளங்கோவடிகள் (முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, பாலை என்பதோர் படிவம் கொள்ளும்) கூறினமையானும் பாலைத்திணையையும் அவ்வாசிரியர் எண்ணி ஏதோ ஓர் ஏதுவினால் தொகுத்துக் கூறவில்லை.

தலைவன் தலைவியைக் கண்டின்புறும் நிகழ்ச்சியினைக் குறிஞ்சியிலும் தலைவன் தலைவியுடன் இருத்தலை முல்லையிலும், தலைவியைவிட்டுத் தலைவன் பிரிதலைப் பாலையிலும், தலைவன் குறித்தபருவத்தில் வாராமையின் தலைவி இரங்குதலை நெய்தலிலும், தலைவன் வந்தவுடன் தலைவி ஊடுதலை மருதத்திலும் அடக்குவர். இவ்வகை ஒழுக்கங்களைப் பற்றிப் பலபுலவர்கள் பாடிய பாடல்கள் மிகப்பல. அவற்றைக் கற்றோரும் கற்போரும் உன்னுந்தோறும் உன்னுந்தோறும் "பசியால் இடர்உழந்தவர்கள் அமுது அருந்தும் போது எய்தும் இன்பம் போன்ற இன்பத்தை அடைந்து மகிழுவர்".

தொல்காப்பியர் கருப்பொருள்களைத் தொகுத்துக் கூறும் போது தெய்வம், உணவு, மா (=விலங்கு, மரம், புள், பறை, தொழில், யாழ் என்ற எட்டும்பிறவும் கருப்பொருள் என்று கூறினார். பிற்கால நூலாகிய "நம்பியகப்பொருள் என்னும் நூலில் நாற்கவிராசநம்பியவர்கள் இவ்வெட்டினொடு உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஊர், நீர், பூ, பண் என்னும் ஆறினையும் சேர்த்துக் கருப்பொருள் பதினான்கெனக் கூறியுள்ளார். ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருளைப் பற்றித் தொல்காப்பியர் யாதும் கூறுவிடினும் (கூறவில்லையோ அன்றி நூல் பழமையின் கூறிய பாடல் கிடைக்கவில்லையோ தெரியவில்லை) பிற்கால நூலாகிய நம்பியகப் பொருளில் ஒவ்வொருதிணைக்கும் உரிய கருப் பொருளைத் தொகுத்துக் கூறியுள்ளார்.

சேயோன் மேய மைவரை உலகமாகிய குறிஞ்சி நிலம் என்பது மலையும் மலைசார்ந்த இடமுமென்று தெரிகின்றது. இக்குறிஞ்சிக்குரிய விலங்குகளை நம்பியகப் பொருள் என்னும் நூலில் ஆராயும் போது புலி, கரடி, யானை, சிங்கம் ஆகிய நான்கு விலங்குகளேயென அறிகின்றோம். "மறப்புலி குடாவடி கறையடி சீயம்" குறிஞ்சிக்குரிய விலங்குகளென்று நம்பியகப் பொருளில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் "மாயோன் மேய காடுறை உலகமாகிய முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த இடமும் என்று தெரிகின்றது. இம் முல்லைநில விலங்குகளை ஆராயின் மான் முயல் என்னும் இரண்டு விலங்குகளே முல்லை நில விலங்குகளாம். நாற்கவிராச நம்பியவர்கள் "மான்முயல்" முல்லைநில விலங்குகளென்று குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இவ்விரண்டு திணைகளுக்குரிய விலங்குகளை ஆராயின் மான் என்னும் விலங்கானது முல்லை நில விலங்காம். குறிஞ்சிநில விலங்கன்று எனபது வெள்ளிடைமலையென நன்கு விளங்குகிறது.

மா என்பது பல பொருள்களைக் குறிக்கும் ஒருசொல். மாதாங்கவும் (புறம் 14), மாச்செலவு (சிறுபா 259), மாச்சிந்தித்தும் (முல்லைப் 74) மாஎடுத்த (மதுரைக் 49) என்ற இடங்களில் மாஎன்பதற்குக் குதிரை என்றும் மா ஈண்டவும் (பட்டினப் 198), மாபுகல் (மலைபடு 500) என்ற இடங்களில் மாஎன்பதற்குப் புலி என்றும் நச்சினார்க்கினியர் என்னும் புலமை யுடைய புலவர் பொருள் கொண்டுள்ளார். இன்னும் பல பொருள் (ஒருவகை மரம், அரிசி போன்றவற்றைத்துளாக்கிய பொருள், விலங்கு) கொள்ள வேண்டும்.

ஆகவே விலங்குகளைக் குறிக்கும் மா என்னும்சொல்லை ஆராயும்போது விலங்குகளைக் குறிக்கும் பொதுச் சொல்லாம்.

விலங்குகளைக் குறிக்கும் மா என்னும் சொல்லானது சில இடங்களில் மான் என்றும் வரும். கலி மா (புறம் 14, 55, 116) என்னும் சொல்லிற்கும் கலிமான் (புறம் 12,15, 141)என்ற சொல்லிற்கும் உரிய பொருளை ஆராயும் போது இருஇடங்களிலும் மனஞ்செருக்கிய குதிரை என்றே பழைய உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார்.

ஆகவே மா என்னும் சொல்லும் முல்லைநில விலங்கினைக் குறிக்காத போது மான் என்னும் சொல்லும் ஒருபொருளைத் தரும் இருசொற்களாம். இனி மா என்னும் சொல்மான் என்று ஆவதற்கு உரிய விதியை ஆய்தல் வேண்டும். தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் உள்ள 231 ஆம் விதியை ஆய்வோம்.

"மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத்து அவைஅவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும்"

என்னும் விதியின் ஈற்றடியில் ஆ என்னும் சொல்லும் மா என்னும் சொல்லும் னகரச் சாரியை பெறும் என்றார். பவணந்தி முனிவரும் இக்கருத்தைக்கொண்டே

"ஆமா கோனவ் வணையவும் பெறுமே" என்று ஒரு விதியினைக் கூறியுள்ளார்.

இவ்விதியில் உள்ள அணையவும் என்ற உம்மையினால் னகரச் சாரியை இல்லாமல் மா என்றும் வரும் என்று தெரிகின்றது.

ஆகவே மா என்பதும் விலங்கினைக் குறிக்காதபோது மான் என்பதும் ஒரு பொருளைக் கொடுக்கும் என்று தெரிகின்றது.

"வய"என்னும் சொல்லின் பொருளை ஆராய்தல் வேண்டும். "வய என்னும் சொல் வலிமை என்று பொருள் படும்" என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்டுளது.

"வயவலி யாகும்" (தொல், சொல், உரியியல் 68) பழைய உரையாசிரியரும் சிறந்த உரையாசிரியரும் வலிமை என்றே பொருள் கொண்டுள்ளனர். வேறுவிதமாகப் பொருள் கொள்ள வில்லை.

இனி, வயமா என்னும் சொல்லின் பொருளை ஆய்வோம். சீவகசிந்தாமணியில்' வயமாமுழங்க' (2778) என்பதற்குப் புலி முழங்க என்றும் 'வயமா கூடுறை முழவலி புலி' (மதுரைக் 677) என்பதில் வயமா என்பதற்குக் கரடி முதலிய வலிய விலங்குகள் என்றும் நச்சினார்க்கினியர் பொருள் கொண்டார். பெருங்கதை என்னும் நூலில்" அலங்குமயிர் எருத்தின் வயமான் (இலாவண, கோயில்வேவு 16-17) என்பதற்கு உரை எழுதும் போது திரு. சோமசுந்தரனார் "அசையா நின்றமயிரினையுடையதொரு சிறந்த புரவு"(புரவு=குதிரை) என்று பொருள் கொண்டுள்ளார். 'வலை நாண் இமிழ்ப்புண் வயமாப்போல' (பெருங் 156; 57) என்பதில் வயமா என்பதற்கு திரு, உ. வே. சாமிநாதஐயரவர்கள் சிங்கம் என்று (அடிகுறிப்பில்) குறிப்பிட்டுள்ளார்.

இனி வயமான் என்ற சொல்லையும் ஆாயவேண்டும். புறநானூறு 44ஆம் பாடலில் வலியகுதிரை என்றும் 52ஆம் பாடலில் புலி என்றும் 318ஆம் பாடலில் வலிமிக்க சிங்கம் என்றும் பழைய உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார்.

இவ்விரண்டும் (வயமா, வயமான்) சொற்களை ஆராயும்போது இரண்டும் ஒரே பொருளைத் தரும் சொற்கள் என்றும் விலங்குகளைக் குறிக்கும் பொதுச்சொல் என்றும் தெரிகின்றது.

சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகை என்ற நூலில் கபிலர் என்னும் புலவர் குறிஞ்சிக் கலியைப் பாடினார். "பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி......... கல்விவலார் கண்ட கலி" என்னும் வெண்பாவினால் இக்குறிஞ்சிக்கலி கபிலரால் இயற்றப்பட்டது என்று இதனை அறியலாம். டாக்டர், மா. இராசமாணிக்கனார் (வள்ளுவர் பண்ணையின் கலித்தொகையில்) ஒத்துக்கொள்கின்றார். அக்குறிஞ்சிக்கலியின் முதற் செய்யுளில் உள்ள பகுதியே

கயமலர் உண்கணாய் காணாய் ஒருவன்
வயமான் அடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியன் வில்லன் வரும்என்னை நோக்குபு
முன்னத்தின் காட்டுதல் அல்லது தானுற்ற
நோயுரைக்கல்லான் பெயருமன் பன்னாளும்......" என்பது.

இப்பகுதியில் "ஒருவன் வயமான் அடித்தேர்வான் போல" என்ற பகுதிக்கு உரை எழுதிய நான்கு உரையாசிரியர்களின் உரைகளைக் காண்போம்.

(க) உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் "தனக்கு ஒப்பு இல்லாதான் வலியையுடைய யானை முதலியவற்றின் அடியைத் தேடுவான் போல" என்று குறிப்பிட்டுள்ளார்.

(உ) தேனருவிப் பதிப்பகத்தார் வெளியிட்ட கலித்தொகையில் திரு. புலியூர்க்கேசிகன் "ஒருவன் ...... வலிய விலங்குகளின் தடத்தை ஆராய்பவனைப் போல" என்று குறிப்பிட்டுளார்.

(ந) வள்ளுவர் பண்ணை வெளியிட்ட கலித்தொகையில் ஆசிரியர் குழுவினர் "ஓர் இளைஞன் ...... விலங்குகளின் காலடிச் சுவடுகளைத் தேடி வருபவன் போல" என்று குறிப்பிட்டுள்ளார்.

(ச) அன்பு வெளியீடு (புதுச்சேரி) என்னும் பதிப்பகத்தார் வெளியிட்ட கலித்தொகையில் திரு. சக்திதாசன் சுப்பிரமணியன் என்பவர் "...... தன் வயப்பட்டுத் தப்பிய மானைத்தேடி அதன் அடிச்சுவடுபற்றித் தேடுவான் போல" வருவான்" என்று (முதல்பதிப்பு மார்ச்சு 1958) குறிப்பிட்டுள்ளார்.

இந்நான்கு உரைகளுள் முதல்மூன்று உரைகளைப் பற்றி ஆராயும் போது வயமான் என்பதற்குரிய பொருளில் அதிக வேறுபாடுகள் இல்லை. ஆனால் நான்காம் உரையினை ஆராயும் போது கீழ்க்காணும் ஏதுக்களை ஆராய்வோம்.

(க) வய என்ற சொல்லிற்கு வலிமை (வலி) என்ற பொருள் தொல்காப்பியத்தினாலும் சங்க இலக்கியங் களினாலும் தெரிகின்றது.

(உ) வய என்பதற்குப் பழைய உரையாசிரியர் தன்வயப் பட்டுத்தப்பிய என்றோ வேறு விதமாகவோ பொருள் கொள்ளவில்லை.

(ங) மா என்னும் சொல்லே னகரச்சாரியை பெற்று மான் என்று வந்தது.

(ச) மான் என்னும் விலங்கு குறிஞ்சிநில விலங்கன்று. முல்லைநில விலங்காகும்.

(ரு) மா என்பதும், மான் என்னும் முல்லைநில விலங்கைக் குறிக்காத போது மான் என்பதும், ஒரு பொருளைத்தரும் சொற்கள்.

(சா) மான் என்பது குறிஞ்சிக்கலியில் வந்தமையின் புலி, கரடி, யானை, சிங்கம் ஆகிய நான்கனுள் ஒன்றினைக் குறிப் பிட்டிருக்கவேண்டும்; இல்லையேல் பொதுவாக விலங் கென்று குறித்திருக்கவேண்டும்.

(எ) சங்க இலக்கியங்களில் குறிஞ்சிநிலத்தைப் பற்றிக் கூறும் போது யானை என்னும் விலங்கினைக் குறித்தனர் என்பதற்கு திணைமொழி ஐம்பது என்னும் நூலில் 9 ஆம் பாடலை எடுத்துக் காட்டாகக் காண்போம்.

"வேங்கை மலர வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்கமை மென்றோள் குறவர் மகளிரேம்
சோர்ந்து குருதி ஒழுகமற் றிப்புனத்தே
போந்தில ஐய களிறு

இதில் யானையையே குறிப்பிட்டுள்ளார்.

(அ) மான் என்பதற்கு நச்சினார்க்கினியர் யானை முதலிய விலங்கென்றே குறிப்பிட்டுள்ளார். (இதனால் இவரது புலமை நன்கு விளங்கும்).

(கூ) சங்ககாலத்திற்குப் பிற்காலத்தேதான் யானை, மான் போன்ற விலங்குகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

(ம) இப்பாடலைக் கபிலர் பாடியதனால் வேறு இடங்களில் எவ்விலங்குகளைக் குறிப்பிட்டுள்ளார் என்பதை ஆராய வேண்டும். ஓர் எடுத்துக் காட்டைக் காண்போம்.

" ................................. நாடன்
உருவவல் வில்பற்றி அம்பு தெரிந்து
செருச்செய் யானை செல்நெறி வினாஅய்
புலர்குரல் ஏனல் புழையுடை ஒருசிறை
மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர் " ......................................."

என்னும் அகநானூற்று "அஉ" ஆம் பாடற் பகுதியில் மானைக் குறிப்பிடாமல் யானையைக் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நோக்கற் பாலது.

(கக) " கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது"

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க செருக்கும், வலிமையும் இல்லா மானை எதிர்த்துப் போர் செய்யாது செருக்கும் வலிமையும் உடைய யானையை எதிர்த்துப் போர் செய்யும் பழந் தமிழர் வீரம் இதனால் நன்கு விளங்குகின்றது.

(கஉ) வய என்பதற்கு வசப்படுதல் என்று உரை கொண்டது முறையா என்பதனை ஆராய வேண்டும். தமிழில் ய என்னும் எழுத்து சில இடங்களில் ச என்னும் எழுத்தாக மாறுமேயொழிய ச என்னும் எழுத்து ய என்னும் எழுத்தாக மாறாது. எடுத்துக்காட்டாக சங்கஇலக்கியமாகிய புறநானூற்றில் இக்கபிலரே பாடிய ஒரு பாடலில் ஈயல் (செம்புற்றீயலின் இன்னளைப் புளித்து) என்று குறிப் பிட்டுள்ளார். இச்சொல் பிற்காலத்தே ஈசல் என்று மாறி யது. பழங்காலச் சொல் ஈயல் என்பதே.

(கங) வசப்படுதல் என்ற பொருளில் பிறசொற்கள் வழங்கின. எடுத்துக்காட்டாக—செங்கணால் பற்றப்பட்ட கணைக்காலிரும் பொறையைப்பற்றிக் கூறும் போது "கோட்படுதல்" என்றே குறிப்பிட்டுள்ளார். (சிறைக் கோட்பட்டு.)

இது காறும் வரைந்த வாற்றால் 'வயமான்' என்பதற்கு வசப் பட்டமான் என்று வரைந்த உரை தவறு என்பதும், வலிய விலங் குகள் என்று கூறுவதே இலக்கிய இலக்கணவழக்காற்றுடன் பொருந்துவதென்பதும் பெறப்பட்டன.

# தமிழ் வாழ்வு. *

—புத்தூரான்.

(1) தமிழ்வாழ்வு எனும்தலைப்பில் கவிய ரங்கம்
தங்கள்முன் நிகழ்த்தவென வந்து நிற்பின்
தமிழ்நூல்கள் செப்புகின்ற பண்டைக் காலத்
தமிழ்வாழ்வைச் சொல்லலன்றிச் சொல்லல் ஏது?
இமிழ்திரையின் கடல்களெல்லாம் தமிழர் சீர்த்தி
எடுத்தியம்பி முழங்கிடவே வாழ்ந்த மக்கள்
தமிழ்வாழ்வு வாழாமல் இருந்து விட்டார்
தாரணியில் புகழொழிந்து தாழ்ந்து விட்டார்!

(2) என்மானம் பெரிதன்று எவ்வா றேனும்
என்வாழ்வு உயர்ந்திடவே வேண்டும் என்று
தன்மானம் தனைவிற்று வாழ்தல் தானே
தமிழ்வாழ்வு? அன்று!அன்று! நாயின் வாழ்வு!
தன்னிலையில் தாழ்ந்துவிட்ட சேர மன்னன்
தாகத்தால் உயிர்நீத்தான்; புகழைச் சேர்த்தான்!
இன்னுயிரை மானத்தின் கீழாய்க் கொண்ட
ஏற்றங்காண்! இதுவன்றோ தமிழ வாழ்வு!

(3) நீதிகொன்று பிழைபுரிந்த கார ணத்தால்
நெடுஞ்செழியப் பாண்டியனும் உயிர்து றந்தான்;
வீதியிலே வரும்போது கதவைத் தட்டி
வீணையம் கிளப்பியதால் கையை வெட்டிப்
பாதியிலே பொற்கையன் ஆனான் மன்னன்;
பைந்தமிழர் தமிழ்வாழ்வைப் பாராய்! பாராய்!!
நீதிபிழைப் பின்இன்றோ உயிரை விட்டால்
நீள்புவியில் உயிர்வாழ்வோர் இல்லை யென்பேன்!

(4) சாதமென்றும் ஜலமென்றும் சாம்பார் என்றும்
சாற்றுகின்ற தமிழ்த்தோழர் மாற்றிச் சொன்னால்
பாதியிலே உணவெல்லாம் நின்று போமோ?
பைந்தமிழர் விழியிருந்தும் குருட ரானார்!
மேதினியில் தமிழ்வாழ்வைக் கொல்ல வந்த
மேன்மையிலா இந்திதனை எதிர்த்து நின்று
நாதியிலா மொழிக்(கு)இறந்த தாள முத்து
நடராசன் வாழ்வன்றோ தமிழ வாழ்வு!

---

* கவிஞர், முடியரசன் தலைமையில் தஞ்சை இலக்கியக் கழகச் சார்பில் நிகழ்ந்த கவியரங்கில் பாடப்பெற்ற பாக்கள்.

(5) தமிழ்மொழியில் பேசிவிட்டால் இழிவா மென்றும்
தனித்தமிழில் எழுதிவிட்டால் குறைவா மென்றும்
தமிழ்மொழியின் வளர்ச்சியினைச் சிந்தி யாமல்
தமிழரென்று பேர்சொல்லி வாழு கின்றார்!
தமிழினுக்குத் தலைகொடுத்தான் குமண மன்னன்;
தான்கவரி வீசிநின்றான் சேர மன்னன்;
தமிழுக்குப் பொருட்குவையும் தந்தார் மன்னர்;
தமிழுக்குத் தம்வாழ்வும் தந்து வாழ்ந்தார்!

(6) அகம்கண்டார்; புறம்கண்டார்; காதல் கண்டார்;
அதன்பின்னர் இல்லறமும் கண்டார்; தங்கள்
அகத்தினிலே தூய்மையினைக் கண்டார்; தீய
அழுக்காறு களைந்தவராய் வாழ்வைக் கண்டார்;
நகத்தினிலே தசையுள்ள தன்மை போல
நல்வாழ்வில் அறம்கண்டார்: பொருளைக் கண்டார்;
சுகங்கண்டார்; சோம்பலிலா உழைப்பைக் கண்டார்;
சுதந்திரமாய் வாழ்தலிலே இன்பம் கண்டார்;

(7) பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் என்று சொன்ன
பேரறிஞன் வள்ளுவனின் வாழ்க்கைப் பாதை
சிறப்பென்று கொண்டதனால் சாதி யின்றி
சீர்மையுடன் தமிழரெல்லாம் வாழ்ந்து நின்றார்;
உறுப்பினிலே வேறுபடா மனிதன் தன்னை
உயர்ந்தவனும் தாழ்ந்தவனும் என்று சொல்லிச்
சிறந்ததொரு தமிழினத்தைச் சிதைத்த ழித்துச்
சீரில்லா சாதிசொல்லி வாழு கின்றார்!

(8) விருந்தின்றி உண்டதொரு பகலைத் தானே
வீண்பகலாய் நினைத்தவராம் தமிழ மக்கள்
வருவிருந்தை உபசரித்து வாழ்ந்து வந்தார்;
வளங்குன்றா தமிழ்வாழ்வு இதுவே யாகும்!
விருந்தோம்பற் பண்பின்று எங்கே? எங்கே?
வெறுத்தொதுக்கி வைத்தனரோ தமிழ வாழ்வை?
வருந்தமிழர் வழியேனும் விருந்தின் பண்பை
வாழ்வினிலே கடைப்பிடித்தல் வேண்டும்! வேண்டும்!!

(9) ஈதலிலே புகழ்கண்டு வாழ்ந்தார் மக்கள்;
ஏற்பதுவும் இகழ்வென்று கொண்டார் அன்னோர்;
சாதலிலும் புகழுடனே செத்தார்; பின்னர்
சாவாத இலக்கியம்போல் நிலைத்து நின்றார்;
காதலிலே இலக்கியத்தைக் கண்டார் முன்னோர்,
கருத்தினிக்கும் இதுவன்றோ தமிழ வாழ்வு!
மோதலிலே இன்றுவாழும் தமிழன் வாழ்வு
மோசமான வாழ்வென்பேன்! இழிந்த வாழ்வு!

(10) அன்புதன்னில் அடிப்படையில் வாழ்ந்தார் மக்கள்;
அறந்தன்னின் அடிப்படையில் ஆண்டார் மன்னர்;
துன்புக்கும் துணையானார் பண்டை மக்கள்;
தோழமையால் நம்நாடும் சிறக்கச் செய்தார்;
இன்பத்தின் எல்லையிலே நின்று மக்கள்
எழிலார்ந்த தமிழ்வாழ்வு வாழ்ந்து வந்தார்;
தன் உயர்வு கருதியிங்கு பிறரைக் கீழே
தாழச்செய் வஞ்சகம்தான் இற்றை வாழ்வு!

(11) குறள்வாழ்வே தமிழ்வாழ்வு! தகைமை வாழ்வு!
குவலயத்தார் போற்றுகின்ற சிறந்த வாழ்வு!
அறநூல்கள் பகர்வதெல்லாம் தமிழ வாழ்வு!
அருந்தமிழின் இலக்கியம்சொல் அழகு வாழ்வு!
சிறந்ததொரு தமிழ்க்கவிஞன் இளங்கோ சொன்ன
சிறப்பான ஒருவாழ்வு தமிழ வாழ்வு!
திறல்மறவர் செயல்களினால் சிறந்த வாழ்வு
திக்கெங்கும் புகழ்வளர்த்த தமிழ வாழ்வு!

(12) திருவிடத்துப் பாண்டியனே! சேரா! சோழா!
தீந்தமிழின் சுவைதன்னைப் பருகுந் தோழா!
திருப்பித்தான் வரலாற்றைப் புரட்டிப் பாராய்!
தித்திக்கும் தமிழ்வாழ்வை அறிந்து தேராய்!
கரும்பினிலே சுவையைப்போல் உனது நெஞ்சக்
கருத்தினிலே தமிழ்வாழ்வைப் பதிய வைத்துக்
குருதிதனைத் தந்தேனும் தமிழ வாழ்வைக்
கொண்டிடவே செயலாற்றி மகிழ்வோம் வாராய்!

# இலக்கியமும் வாழ்வும். *

திரு. அமீது, எம். ஏ.

இலக்கியம் என்பது வாழ்வைக்காட்டும் கண்ணாடியாகும். இலக்கியத்தில் எல்லா நிலையினரையும் காணலாம். இலக்கியம் மனிதன் சிந்திக்கத் தொடங்கியபோது தோன்றியதாகும். இலக்கியத் தோற்றத்திற்கு முதலாக நிற்பவைகளை நான்கு வகைப்படுத்தி அறிஞர் மொழிவர். ஒருவர் எண்ணத்தை மற்றவருக்கு எடுத்துக் கூறவேண்டிய இன்றியமையாமை மனித வாழ்விற்கமைந்தமை யொன்றாகும். இரண்டாவதாகத் தம்மை யடுத்துவாழும் மற்றவர் செய்யும் செயல்களும் காரணமாகலாம். கற்பனையாளன் எதிர்கால வாழ்வைப் பற்றிக் காணும் கனவுகளும் மூன்றாவதாக எண்ணலாம். எதற்கும் வடிவு கொடுத்துப் பேசும் மக்கள் இயல்பு இறுதிக்காரண மாகலாம்.

நம் தமிழ் மொழியில் இவ்வடிப்படைகளில் தோன்றிய இலக்கியங்கள் பலவுண்டு. புவியோர் போற்றும் புறநானூறு, அறிஞர் போற்றும் அகநானூறு போன்ற நூற்கள்வுள்ளன. நாடகத் துறை, இசைத்துறையாயவற்றிலும் பலநூல்கள் இருந்தனவென அறிகின்றோம்.

பாண்டியன் அறிவுடைநம்பி அரசனாகவிளங்கினாலும் மக்கள் வாழ்வை விளக்கும் இலக்கியம் புனையும் ஆற்றலும் இருந்ததென அறிகின்றோம். குழந்தைகளினியலை இலக்கிய நயம்பொருந்தப் பாடியுள்ளார். இக்கருத்தினைக்

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும்
மயக்குறும் மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழும் நாளே.

என்று பாடியுள்ள இவ்வடிகள் எக்காலத்தும் மக்கள் வாழ்வொடு பொருந்தி இன்பஞ்செய்ய வல்லதாகும். திருவள்ளுவரும் 'மக்கள் சிறுகையானளாவிய கூழ் அமிழ்தினும் இனிமையானது' என்று பாடுகின்றார். அதனை

"அமிழ்தினும் ஆற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்".

என்று பாடுவதைக் காணலாம்.

* கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழக ஆண்டுவிழாவில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறை மாணவர் திரு. அமீது அவர்கள் பேசியதன் சுருக்கம்.

வஞ்சினங் கூறுவது மக்கள் வாழ்வில் காணக்கூடியதொன்று. இதனுல் வஞ்சினங் கூறுவாரின் உள்ளக்கிடையினைத் தெள்ளிதினுணரலாம். ஒரு மன்னன் அறம் நிலைபெற்ற என்னுடைய அன்பினையுடைய அவையத்தில் திறனில்லாதவனை நாட்டிய குற்றமுடையோனுகுக என்று மொழிவதைக் காணுகின்ருேம். சோழன் நலங்கிள்ளி பரத்தையர் வாழ்வை வெறுத்துப்பேசுவதைக் காணுகின்ருேம்.

சங்ககால வாழ்வில் புலவர்கட்கு நல்ல மதிப்பிருந்தது. அரசியலில் தயக்கமின்றி வேண்டும்போதெல்லாம் தலையிட்டு மன்னனையும் மக்களையும் திருத்திய செம்மைப்பாட்டைக் காணுகின்ருேம். அரசனின் தனிவாழ்விலும் கூடப் புலவர்கள் தலையிட்ட செய்தியைக் காணுகின்ருேம். இக்காலத்தில் சொந்த செய்தியென மறுத்துரைப்பர். பண்டைய புலவர்கள் போன்று இன்றைய புலவர்களில்லை யென்பாருண்டு. ஆளுகின்றவரும் பண்டைய அரசர்கள் போன்ரு வுள்ளனர்? என்று கேட்க மனம் விரும்புகின்றது.

பேசிக்கொள்ளுவதுபோலவும் இலக்கியப் போக்கு அமைந்து வருகின்றது :

> உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்ருேரால்
> எண்ணப்பட வேண்டா தார்.

கள்ளை உண்ணுதே! சான்ருேர்களால் எண்ணப்படவேண்டாதவர் உண்பாராக என்று கூறுகின்ருர். கற்றவனுக்கு எந்த நாடும் அவன் நாடுபோல ஆகும்; எந்த ஊரும் அவனூர்போல ஆகும், அங்ஙனமிருக்க ஒருவன் சாகும் வரையிலும் கல்லாதிருப்பது எவ்வாருே? என்ற கருத்துப்பட வள்ளுவர் கூறும் குறளும் பேச்சு முறையில் அமைந்ததாகும்.

இலக்கியத்தில் கவிஞர் கற்பனை செய்து காட்டுவதும் கருத்தைக் கவருவதாகவிருக்கும்.

> "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேரா தியல்வது நாடு".

என்று வள்ளுவர் கூறுவதும் கற்பனை நாடேயாகும். இவ்வாறு இலக்கியத்தில் எல்லாவகையான வாழ்வுத்துறைகளையும் காணலாம்.

# விளக்கவுரைக்கோர் வேண்டுகோள்

சோம. சிவப்பிரகாசம்,
( அண்ணுமலைப் பல்கலைக் கழக மாணவன். )

புலவர் பெருமைக்குச் சான்ருய் நிலவும் புறநானூற்று 50-ஆம் பாடலில், ''அறியா தேறிய என்னை'' என்ற தொடருக்கு இன்றைய புலவர்கள் சிலர், ''முரசு கட்டிலில் பிறர்துஞ்சின் கொலைத் தண்டனை என்பதறியா தேறிய என்னை'' என்று பொருள் கூறுவர். இஃது அத்துணை அளவு பொருந்துமாறில்லை. ஏனெனிற் கூறுவன்.

அற்றைய புலவர்கள் சற்றேனும் மன்னர் தகுதிக்குத் தாழ்ந்தா ரல்லர். வேந்தர்களுக்கும் செவியறிவுறுத்தும் செவ்வியுடையோர் புலவர்கள். சந்து செய்தலும், மேற்சென்றிடித்துரைத்து நல்வழிப் படுத்தலும் அன்னோர் கடன். வேந்தனுடன் பன்னாள்கூடி வாழ்ந்தும் வருவர். அத்துணைப் பெருமையும், அரசியற் ருெடர்பும் உடையாருளொருவரன்றே மோசிகீரனுர். அப்பெரும் புலவருக்கு அந்நெறி தெரியாதெனல் எவ்வாறு பொருந்தும்? துயிலும்போதே மன்னன் ''மோசிகீரனுர்'' என்று தெளியும் அளவுக்கு அவனுடன் பழக்கமுடையவரென்பது தெளிவு.

'இது முரசு கட்டிலென்றறியாதேறிய என்னை' என்பது அறிவு சான்ற உரையாகும். 'மண்ணிவரா அளவை' என்பதனுன் முரசம் கட்டிலில் இல்லை என்பது பெறப்படும். மென்பூஞ்சேக்கை போன் றுள்ளதால் அதனைப் படுக்கை என்றே கருதினுராதல் தேற்றம்.

கீழ்க்குறிப்பில் 'முரசு கட்டில் அறியாதேறிய மோசிகீரனை' என்றுள்ளது. இஃதும் முரசு கட்டில் என்றறியாதேறிய மோசி கீரனுர் எனவும் கொள்ள வைப்பதை நோக்குமின். இதனுல் 'அறியாதேறிய' என்ற அடிக்கு முரசு கட்டிலென்றறியா தேறிய என்பதே உண்மைப் பொருளாதல் தேற்றம்.

---

## *கையறவு.*

மதிப்புக்குரிய எச். எ. பாப்பிலிப் பாதிரியார் அண்மையில் காலஞ்சென்றமை யறிந்து வருந்துகின்றோம். இவர் பலவாண்டுகள் ஈரோட்டில் ஆசிரியராகவும், பாதிரியாராகவுமிருந்து தொண்டு புரிந்தவர். தமிழில் நல்ல புலமையும், கருநாடக இசைத்துறையில் மிக்க தேர்ச்சியும் பெற்று விளங்கினவர். திருக்குறளிலும், திருவாச கத்திலும் மிக்க பற்றும் ஈடுபாடுமுடையவர். இவருடைய மறைவு நம் நாட்டிற்கும் மொழிக்கும் பேரிழப்பாகும்.

பொழிற்ருெண்டர்.

# வள்ளுவர் சொல்லறம்

தமிழன்பன்

வான்புகழைத் தமிழ்நாட்டுக்குத் தந்தருளிய வள்ளுவர்தம் சொற்களிலே அறமெல்லாம், வாழுந்திறமெல்லாம் வடித்தளித்துள்ளார். அவரோர் அறிவுப் பெருமலை; அவர் நூலொரு தொடு மணற்கேணி. 'அந்நூலின் நலனை முற்றக்காட்ட வல்லேன்' என முன்வருவார் செயல், சிற்றெறும்பு பொன்று பெருங்கடலை வற்றக் குடிப்பேன் எனச்சூளுரைத்து வருதல் போன்று நகையினையே விளைக்கும் அவர் நூல் பரந்து விரிந்து சிறந்ததுவாய், நவில்தொறும் நயம்பயப்பதாய், சுவைப் பெட்டகமாய், கருத்துக் கருவூலமாய் விளங்குவது. இக்கட்டுரையில் வள்ளுவர் வழங்கும் சொல்லற மாண்பை மட்டும் சற்றே காண்போம்.

வாய் இரண்டு செயல்களைச் செய்கின்றது. அவை உண வுண்ணலும் உள்ளக் கருத்தை உணர்த்தலுமேயாம். வாய் இயற்றும் இப்பணிகள் இரண்டும் மனிதவாழ்வின் இயக்கத்திற்கு – ஏன் உயிர் வாழ்வின் இயக்கத்திற்கே மிகமிக இன்றியமையாதனவாம். இவ் விரண்டனுள்ளும் உள்ளக் கருத்தை உணர்த்தலே உயரிய தொன்றாகலான், அவ்வாற்றலில்லா விலங்கினத்தை யெல்லாம், 'வாயில்லாச் சீவன்' என நாட்டகத்தே நவிலக்கேட்கின்றோம். இனியவை கூறல், இன்னாதன கூறல், புறங் கூறல், பொய் கூறல், கற்றது கூறல், மறைபிறர்க்குரைத்தல் இன்ன பிறவெல்லாம் செய்வது மனிதனின் வாய்தான். எனவேதான், வாயின் செயல்களை வழுவற நன்கறிந்த வள்ளுவப் பெருந்தகை, இவ்வாயின் சொல்லாற்றும் பணியை நல்லாற்றுப் படுத்துவான் வேண்டி, வற்புறுத்துவன வற்புறுத்தி வரையறுப்பன வரையறுத்துக் கடிவன கடிந்து விளக்கிப் போயினர்.

**கனியும் காயும்:—**

குழலும் யாழுந் தோற்க மழலை பேசித் திரிந்த குழந்தைப் பருவம் கழிந்த பின்னர், அறிவறிந்த மகனாய், மக்கட்குழுகியத்தில் 'பாட்றிந்தொழுகும் பண்புடையாளனாகப் பிறங்க இனியவை கூறும் இயல்பினனாதல் வேண்டும். இன் சொல்லாவது யாது? அன் பொடுகலந்த வஞ்சனையில்லாச் சொல்லே இன் சொல்லாம். அவ்வின்சொல்லும், பொய்யானதாய்ப் போலியானதாய் இராமல் நெஞ்சொடுகலந்த நீர்மைத்தாதல் வேண்டும். "முகத்தானமர்தலில் அன்பும், இனிது நோக்கலில் அருளும் ஒன்றி அறத்தானும் இன் சொல்லினதாகிய அறமாய்க் கனிந்து நிற்றல் காண்க" எனப் பேரறிஞர் திரு. வி. க. அவர்கள் தம் உரைவிளக்கத்தே கூறி யுள்ளனர். கடுத்த முகத்தோடு கனிந்த சொற்களைச் சொல்லுதல் நன்றன்றென்பார்; முகத்தானமர்ந்தினிது நோக்கிச் சொல்லுக வென்றார்.

"முகத்தானமர்தலை மலர்தலாகவும், இனிது நோக்கலை மணங் கமழுதலாகவும், இன் சொல்லுரைத்தலைத் தேன்பிலிற்றலாகவும்" தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் தகவுற மொழிந்தார்.

இனிய சொற்கள் நல்லோரிணக்கமுடன் அல்லோர் பரிவும் பெற்றுத் தரும். "வன்னெஞ்சையும் வெல்லும் வன்மை மென் சொற்கே உண்டென மேற்புல அறிஞர் பென்காம் என்பாரும் கூறினர்[1]. எடுத்த செயலை முன்னின்று முட்டின்றுத் தொடுத்துமுடிக்கும் ஆற்றலும், பகையாளரையும் அருகணைத்துத் திருத்தும் ஆற்றலும் இன் சொற்கே உண்டு. நயனீன்று நன்மைபயக்கும் அதன் பயனை உணர்த்தும் வள்ளுவர் கனியை அதற்கு உவமையாக்கிக் காயை இன்னச் சொல்லுக்கு உவமையாக்கினர். கனிவிட்டுக் காய் நாடல் அறிவுடைமை யாகுமா? நம்வாய் கனியையும் நல்கும் காயையும் நல்கும். பிறர்வாய் கனிவாயாக இருத்தலை விரும்பும் நாம், நம் வாயைக் காய் வாய் ஆக்கிக் கோடல் நன்றோ? எனவே கனியாஞ் சொற்களைக் கூறிக் காயாஞ் சொற்களை நாடா தொழிவோம்.

"இனிய வுளவாக வின்னத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று— (இனியவைகூறல்)

**புண்ணும் வடுவும் :—**

அடக்கமின்றிப் பேசுவோனை 'வாய் வளர்ந்தவன்' என்றும் நாக்கு நீண்டவன்' என்றும் பட்டந்தந்து பகடி செய்கின்றோம். பணிவுப் பண்பை வளர்க்கும் முற்றக்கற்ற மூதறிவாளரும், வாழ்வியல் கற்ற சான்றோரும் தளம்பாத நிறை குடங்களாவர். உளம், உரை, உடல் இம்மூன்றனையும் தீநெறிக்கண் படராவண்ணம் காத்தொழுகலே அடக்கமுடைமையாம். இம்மூவகை அடக்கங்கள் பற்றியும் வள்ளுவர் கூறுகின்றார். உளவடக்கம் உடலடக்கம் எனுமிரண்டற்கும் ஒவ்வொரு குறட்பா யாத்தவர் மொழியடக்கத்திற்கு மூன்று குறட்பாக்கள் யாத்தமை, அவ்வடக்கம் உண்மையான் வரும் உயர்வும், இன்மையான் வரும் ஏதமும் கருதியே போலும். இந்நாவடக்கத்திற்கே தலைமைதந்து ஆங்கிலக் கவிஞர் என்றி உவோர்ட்சு வொர்த் லாங்பெல்லோ என்பாரும் பாடியுள்ளார்[2].

எளிய குடிமகன் முதல் கோலேந்துங் கொற்றவன் வரை அனைவரும் நாவடக்கம் நன்கு வாய்க்கப் பெற்றவராக இருக்கவேண்டும். அடக்கமின்றிப் பேசுகின்றவனின் அறிவு, ஆற்றல், பண்பு ஆகியன உலகில் பெருமை பெறுவது இல்லை. நாம் காக்க வேண்டிய பொருள்களிலே ஒன்றிரண்டையில்லை—அனைத்தையுமே காக்க வில்லை யெனினும் கவலையில்லை; நாவொன்றனையேனும் தீய சொற்களைச் சொல்லுவதினின்றுங் காத்தல் வேண்டும். இன்றெனில் சொல் லிழுக்குப்பட்டுச் சோர்வுறல் திண்ணம். கனகவிசயர் கற்சுமந்து நமக்குக் காட்டிய உண்மையும் இதுவேயாம்.

1. Soft words win hard hearts. (W. G. Benham.)
2. Three silences there are: the first of speech,
The second of desire, the third of thought;
This is the love of a spanish monk, distraught.
(Henry wordsworth the long fellow.)

வில்நீங்கிய அம்பையும், வாய்நீங்கிய சொல்லையும் திரும்பிப் பெற முடியாது. ஆகலான், நயந்தருஞ் சொற்களை நவிலலே எஞ்ஞான்றும் இனிது. பிறர் கூறுகின்ற இனிய சொற்கள் இன்பத்தைத் தருதலை உணர்கின்ற நாம் பிறர்மாட்டு அத்தகைய இன்சொற்கூருது இன்னச் சொற்களைச் சொல்லுதல் அறமாகுமா? "நண்பர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? என்று அறிஞர் 'அரிசுடாட்டிலை' வினவிய ஒருவருக்கு அவரோர் ஒப்பற்ற விடைதந்தார். "நம்மிடம் அவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புவோமோ, அவ்வாறே நாம் அவர்மாட்டு நடந்து கொள்ளுதல் வேண்டும்" என்பதே அவ்விடை[1], சொல்லறத்திலும் இம்முறையைப் பின்பற்றுதலே ஏற்புடைத்தாகும். வெவ்விய சொற்கள் விளைக்கின்ற புண்ணை எம் மருத்துவரும் ஆற்றமுடியாது[2] என்றும், வாளைவிடச்சொல் ஆழமாக வெட்டு[3] என்றும் மேனுட்டு நல்லறிஞர் கடுஞ் சொல்லால் விளையும் கொடுமைகளைப் பற்றிக் கூறியுள்ளார். வள்ளுவரோ இவ்வின்னச் சொல்லால் விளையுந் தீமையை இன்னுஞ் சற்று அழகாகவும் உரைக்கின்ருர். ஒருவனை நெருப்பினுல் சுட்டால் அவனுடலில் புண் ஏற்படுகின்றது. உடலில் புண்ணுண்டாயினும் உளத்தே ஆறிவிடுகின்றது. நாவினுல் உரைக்கப்படும் தீய சொல்லும் சுடுகின்றது. ஆயின் நெருப்புப்போல உடலைச்சுடாது உள்ளத்தையே சுடுகின்றது. தீயால் உடலைச்சுட்டால் உள்ளம் அதனை மறந்து விடுகின்றது. தீய சொல் உள்ளத்தையே சுட்டால் அதனை மறப்பது எது?

ஆருது அகலாது அகத்திலே தங்கி விடலால் அதனை வடுவென்ருர். மறைவது புண்; மறையாதது வடு. இங்ஙனம் தீயவை தீயினும் தீமை பயத்தலை எளியமுறையில் எடுத்துரைக்கின்ருர். நம் நெஞ்சில் வடுவேற்றும் வன்கண்ணர்க்கும், 'இன்ன செய்தார்க்கும் இனியவே செய்யு நெறிநின்று இனிய கூறி வடுவேற்ருது வாழ்வோம்.

"தீயினுற் சுட்டபுண் உள்ளாறும் ஆருதே
நாவினுற் சுட்ட வடு"—(அடக்கமுடைமை)

**முன்னும்பின்னும் :—**

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்ருர் தூயவுளத்து இராமலிங்கர். ஒருவர் உயர் பண்புகளை, செயலை அவர் முன்னின்று மொழிதலை நம் நாட்டு நாகரிக நன்னெஞ்சினர் ஏற்ற செயலென இசைவதில்லை. ஒருவர்

---

1. "The question was once put to him, 'how we ought to behave to our friends; and the answer given was, 'As we should wish our friends to behave to us".
Diogenas Leartins.

2. "Sharp words make more wounds than surgeons can heal".
Thomas Churchyard.

3. "A blow with a word strikes deeper than a blow with a sword"
Robert Burtoa.

தம் குறைவற்ற பண்பு நலன்களை அவரில்லாப் போழ்தில் பிறரிடம் பேசிப் புகழ்தலே தமிழரின் இயல்பு. தன்னைத் தன் முன் புகழ்ந்தால் தமிழ் மகன் தலைகுனிந்து நிற்பான். "தம்புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரம்துஞ்ச" என்னும் கலித்தொகைக் கூற்று உணர்த்தும் உண்மையும் இதுவேயாம். ஒருவரின் நிறைகளை நேர் நின்று கூறுவது முறையன்று. ஆயின் குறைகளை நேர் நின்று கூறுவதே முறை. முன்னால் இருக்கும்பொழுது நறவன்ன சொற்களால் உரையாடி, உறவாடிப் பின்னவர்தாம் அகன்ற வழி அவர்பற்றிப் பழிப்புரைப் பறையடித்துத் திரிவோர் உலகில் பலருண்டு. குற்றங் குறைகளை முன்னின்று எடுத்துரைப்பதால் பண்பும் பயனும் மலரும். புறங் கூறலால் விளைவன இகல், எரி, காழ்ப்பு என்பனவும் இவை யொத்த பிறவுமேயன்றோ! மூவர் கூடி ஓரிடத்தே உரையாடுங்கால், அங்கில்லா நான்காவதொருவர்பற்றிப் பழிப்பதும், மூவரில் ஒருவர் அகன்றவுடன், எஞ்சிய இருவர் சென்ற அவரைப்பற்றி இழித்துரைப்பதும், அவ்விருவரும் தனித்தனியே பிரிந்து செல்லுங்கால் 'இவன் என்ன வாழ்ந்தான்' எனத் தத்தம் முன் தலைதட்டி முணகிச் செல்லுவதும் நாம் காணற்கரிய காட்சியன்று. இவ்வாறு பொய்த்துயிர் வாழ்தலைவிடச் சாதலே நன்றென்கின்றார் வள்ளுவர். தம் மாட்டு உயிரொன்றிய நட்பு பாராட்டும் தொடர்புடையார்ப் பற்றியே புறங்கூறும் அறிவறை போகிய புன்மக்கள் பிறரைப்பற்றிப் புறங் கூற எள்ளளவும் கூசுவரோ? மற்றவர் குற்றங்களை உற்று நோக்கி முற்றவறிந்து சாற்றித் திரியும் இப் 'பெரியோர்' புறங்கூறலாகிய தம் குற்றம் ஒன்றனையேனும் அறிந்து திருந்தின் மக்களிடையே காணப்படும் பிணக்கும், பிளவும் அழியாவோ?

இக்குற்றமொன்றினால் வரும் கேடுகளைத் தெளிவுறத் தெரிந்த வள்ளுவர் 'அறங் கூறான் அல்ல செயினும் புறங்கூறான் என்றல் இனிது' என வற்புறுத்துகின்றார். "இரக்கமின்றி ஒருவன் முன்பு வேம்பாகப் பேசினும் பேசுக, அவன் பின்னின்று இழிவுரை பேசுதல் வேண்டா" என்று அவர் அறிவுறுத்துகின்றார்.

"கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்" — (புறங் கூறாமை)

### நெல்லும் பதரும் :—

பேசுதற்கு வாயிருக்க ஏன் வாளாவிருக்கவேண்டும் என்று எண்ணித் திறந்த வாய் மூடாது பேசித் திரியும் பேதையர் பலரை வாழ்விலே காண்கின்றோம். பயனற்ற சொற்களை ஒலித்துக்கொண்டிருக்கும் அவருக்கும், இரவு பகல் எப்பொழுதும் ஆர்த்தோடும் ஆற்றிற்கும் என்ன வேறுபாடு? ஒருவனுடைய அறிவு நிலை, ஒழுக்க நிலை ஆகியவற்றை அவனுடைய சொற்களிலிருந்தே அளவிட்டுக் கூறிவிடலாம். விலைபோட்டு வாங்காத பொருளென்று கருத்தின்றிச் சொற்களை உமிழ்ந்துகொண்டிருப்பது வெறுக்கத்தக்க செயலேயாம்.

நூலோர் போற்றும் மேலோராயினும் பயனில பேசுவராயின் அவர் தம் பெருமையருமைகள் அருகிக் குறையும். பயனிலாச் சொற்களால் ஆற்றலும் காலமும் அவமே கழிகின்றன. எனவேதான், சிலம்பு யாத்த இளங்கோவும், "வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்" என நல்லுரை பகன்றனர். "அறிவென்னும் உள்ளீடற்ற சொற்களைச் சொல்லுபவனை மகனென்று சொல்லாதீர்கள்! அவனை உள்ளீடற்ற பதடி என்று சொல்லுக" என்கின்றார் பொதுமறை வகுத்த பெருந்தகையாளர். அறிவுள்ள சொற்களை உள்ளீடுள்ள நெல்மணி யென்றும், அஃதற்ற சொற்களை உள்ளீடற்ற பதர் என்றும் குறிப்பில் குறிக்கின்ற அவர்தம் அறிவுத் திறம் வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தெஞ்சுகின்றது.

"பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்—(பயனில சொல்லாமை)

**விளக்கும் இருளும் :—**

உள்ளக் கருத்தைப் பிறர்க்கு உரைக்க வாய்த்திட்ட கருவியே சொல். கல்லாதவன் தன் நெஞ்சைத் திறந்துகாட்டப் பேசுந் திறனைப் பயன்படுத்துகின்றான். கற்ற பெருமகனோ தன் உள்ளத்தை மறைத்து உலகில் வாழவே அதனைப் பயன்படுத்துகின்றான். இன்று உலகு வழங்கும் காட்சி யிதுவே. தீதில்லா ஒரு பொருள் உள்ளத்தே இருக்கும் பொழுது 'உண்மை'யென்றும், வாய்வழியே வெளிப்போந்து உலாவும்போது 'வாய்மை' என்றும், அதன் அடிப்படையிலே செய்யும் உடலினது சிறந்த செயல்களின் தன்மை 'மெய்ம்மை' என்றும் வழங்கப்பெறும்.

வாய்மையே வாய்க்கு அணி. வள்ளுவர் வாய்மைபற்றிக் கூறுவன புதுமையானவை; புரட்சியானவை!

வாய்மை என்று போற்றியுரைக்கப்படுவது உயிரொன்றற்கும் ஊறு பயவாச் சொற்களைச் சொல்லுதல்தான் என வரையறை செய்கின்றார் செந்நாப் புலவர். நடந்தவற்றை உரைப்பதே உண்மையென நாம் எண்ணுகின்றோம். ஆயின் நடந்தது கூறல் நன்மைதரின் வாய்மை யென்றும் தீமைதரின் பொய்மையே என்றும் அவர் கூறுகின்றார். இதனைக் கேட்டுத் திகைப்பிலே கிடக்கின்ற நம்மை நோக்கி மேலும் கூறுகின்றார், 'பொய்ம்மையும் வாய்மையிடத்த' என்று! உடனே நாம் துள்ளியெழுந்து, 'ஐயா! வள்ளுவரே! பொய்யும் மெய்யாகுமா? என்று வினவுகின்றோம். 'ஆம்! மெய்யாகும்! புரைதீர்ந்த நன்மை பயக்குமெனில்' என்ற விளக்கத்தை விடையாக்குகின்றார். நிகழாதது கூறி நன்மை விளையின் அஃது உண்மை; நிகழாதது கூறித் தீமை விளையின் அது பொய்மை என்பதும் நம் எண்ணத்தைத் தூண்டுகின்றது. வள்ளுவர் வாய்மைக்குத் தருகின்ற இவ்விளக்கம் அறிவுக்கு விருந்தாக அமைகின்றது.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

# திருவாசகத் தேன்.

**சோ. ந. கந்தசாமி,** B. A., Hons.. அண்ணுமலேப் பல்கலேக் கழகம்.

அற்றைநாட் பிறமொழி பயிலுதல் இற்றை நாட்போல நாகரிகத்தின்பாற்படுவதாகக் கருதப் பட்டமையானும், சமண பௌத்த சமயங்களெல்லாம் வடமொழியையே பெரிதும் பற்றி நின்றமையானும் தமிழரும் கடவுட் கொள்கைகளே அம்மொழியிற் கூறுதல் தகவுடைத்தாமெனக் கருதினராதல் வேண்டும்.

இனி, ''சமயம்'' தமிழ் மொழியே என்று கோடலிற் றவறென்னே? சமயம் என்ற சொல் ''சமைத்துக்கொள்ளப்பெற்றது'' என்னும் பொருட்டாம். அமைத்தலும் சமைத்தலும் ஒரு பொருட் குறிக்கும் தமிழ்ச் சொற்கள். ஓரளவு உருவானும் பொருளானும் ஒத்தியங்குந் தமிழ்ச் சொற்கள் பலவுள. காட்டாகச் சில கழறுதும். தேடுதல்—நேடுதல், தாலுதல்—நாலுதல், பகுப்பு—வகுப்பு, ஏழகம்—மேழகம், இணர்—துணர், மலர்—அலர், மலங்குதல்—கலங்குதல் என்பனபோல் அமைத்தல் சமைத்தல் என்பனவுமாம். ஆகலான் 'சமயம்' தமிழ்ச் சொல்லேயாதல் ஒருதலே. ஆக, சமயக் கருத்துக்கள் தமிழர்க்குப் புதுவனவென்று புகலுவோர் கூற்று பொருந்தாமை உணர்க. இனி, சிவன் என்ற சொற்பயிற்சி சங்கவிலக்கியத்துள் தோன்றவில்லே யாகலான் சிவ வழிபாடு தமிழகத்து இல்லே என்று உரைப்பார் உளரேல் அவர்தம் கூற்று எஃதொக்குமோ என்னில், 'அம்மா' என்ற சொல்லாட்சி சங்கவிலக்கியங்களிற் காணப்பெருமை யான் தமிழர் தாயை அறியாதார் என்று எவரேனும் உரைப்பாரேல் அவர்தம் கூற்றை ஒக்குமென்க. சங்க நூற்களில் அம்மா என்னும் பொருள்தாங்கி அவ்வை, தாய், ஆய் என்ற சொற்கள் பயில்வன போல் சிவனேக் குறிக்கும், முக்கட்செல்வர், மழுவாள் நெடியோன், ஆலமர் செல்வன், இனேய பிற சொற்கள் வழங்கப்பெறுதல் மழபுலமகார்க்கும் புலனுகுமென்க. தமிழர் தாம் கொண்ட கடவுட்கொள்கைகளேக் கடைப்பிடித்து மெய்யுணர்வுற்றுத் திகழ்ந்தனரென்பது தொன்னூற்களால் பெறப்படும் உண்மையாகும். சங்க காலத்துத் தமிழர் தம் 'சமயம்' கடவுட் கொள்கைகளேப் பிறநாட்டிற்கும் போந்து பரப்பும் இயக்கமாக, கட்சியாக இல்லே. அவ்வாறமையாமை எற்றுக்கோ என்னில் சங்ககாலத் தமிழ்மக்கள் எல்லோருமே கடவுட் கொள்கையுடையராய் இருந்தனரார்தலின் அக்கொள்கையைத் தமக்குட்பரப்ப ஓரியக்கம் வேண்டப்படாமையின் என்க. ஆயின், வடநாட்டிற் பிறந்த சமண புத்த கொள்கைகள் சமயங்களாக, இயக்கங்களாக—தமிழ் நாட்டிற் புகுந்தன. அச் சமயத்தார் தமிழ் பயின்று ஒல்லும் வகைத் தொண்டாற்றி ஒண்டமிழ் நாட்டில் இடம்பெற்று அமைவுடையோராய்த் தமது சமயம் பரப்பினர். ஆகலான் தமிழர் வேற்றூர் கொள்கையில் காழ்ப்பும் கசப்புங்கொண்டு கலாம் விளேத்திலர்.

நாளடைவில் புறச்சமயத்தார் தமது சமயக்கோட்பாட்டுக்குப் புறம்பாய இசை, அகப்பொருட்பா, கூத்துத்தமிழ் முதலிய தமிழ்ச் சுவை ஒருவி, தமது கோள் நிறுவற்காக அறம் பிறழ்ந்த வழி குறுகினர். அவ்வாறு நிகழ்த்திய காலந்தொறும் தமிழரின் பண் பாட்டையும் கடவுட் கொள்கையையும் தமிழ் இசையையும் அகப் பொருட் பாநலத்தையும் ஓம்பிப் புரத்தற்காகத் தமிழ்த் தாயின் தவப் பயனுய் மாணிக்கவாசகரும் மூவர் முதலிகளும் பிறரும் முகிழ்த்தனர்.

சென்னி ஓதியில் அடரும் பேனைக்குத்தலும், எறும்பனைய சிற் றுயிர்க்கு எய்யாமையால் ஊறு விளைத்தலும் உயிர்க்கொலையின்பாற் படுமென உயரிய அன்புக்கொள்கையிற் காழ்த்த சமணர்கள் தாம் பெரிதும் வேட்கும் துறவு நிலையைப் போலியாக் கோடலும், பற்றற் றாராக வாழவேண்டிய அன்னுர் அரசியலிற் பற்றுண்டாக்கிக் கோடலும், ஆளுடைய அரசின்பால் களிறு ஏவியும், அவரைக் கல்லிற்பூட்டிக் கடலிற் பாய்ச்சி இடர் விளைத்தலும் நன்றின்பால் உய்ப்பவாமோ? நடுவிகவாத் தன்மையீர்! நன்கெண்ணிப் பார்மின்கள். அவர்தம் அழுக்காறு மண்டிய உள்ளத்து இயல்பும், புறச்சமயத்தின் பொலிவுகண்டு பொருப் பரிசும், பிறர்க்கு ஊறு விளைக்கும் பொல்லாங்கு சூழ்ந்த அகமும், தமிழில் மணிப்பிரவாளம் பிறப்பித்துத் தமிழுரைக்குச் செய்த இன்னல்களும் எண்ணிப் பார்ப்பார், முற்கூறிய சிவநெறிச் செல்வர்கள் போல்வார் பிறந் திலரேல் நமது அன்புக் கடவுள் நெறியும் அருந்தமிழின் அழகும் ஒழிந்துபடுமென்று கவலாதிரார்.

இதுகாறும் கூறியவாற்ருல் இலக்கியக் கண்கொண்டு நோக்கு நர்க்கு இந்நூலெழக் காரணம் தமிழ்ப் பண்பை ஓம்புதற்கே என்பது தெள்ளிதிற் புலனும்.

மொழிவன்மையானும் நாநலத்தாலும் பெயர்படைத்த பாவலராய தோலாமொழித்தேவர், நாவுக்கரசர் என்பாரைப்போல அடிகளார் 'மாணிக்கவாசகர்' என்னும் பெயரினராகப் பிறங்கக் காண் கின்றேம். மதிப்பிடற்கரிய மாணிக்கம்போல அடிகளாரின் வாசகம் அளப்பிலாச் சிறப்பிற்று. 'மாணிக்கவாசகத்துக்கு மறுவாசகமில்லை' என்பது பரவை வழக்கு.

புறக்காட்சிகளை யெல்லாம் அகத்துக்கண் கொண்டு நிறுத்தி இமயத்துக் கோடுயர்ந்தன்ன குறிக்கோள்களை யெல்லாம் உன்னிப்பாக உற்றுநோக்கி அங்கண் மாஞாலத்தாரெல்லாம் அற நெறியிற் செல்லுமாற்ருல், செஞ்சொற்களால் பாயாத்தார் தலையாயார் என்க. பிற்காலத்துட் போந்த இலக்கியங்களுள் அன்பு, அறம், மெய்யறிவு, ஒழுக்கநெறி, உளத்தூய்மை, இனையபிற அறப் பண்புகளை மறுவறத் தேர்ந்து தெளிந்து நல்கும் திருநூல் திருவாசக மென்னிற் பிறழாது. "உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியில் உருவெழுதி" அருள் வாழ்விற்குரிய அறநெறிகளைச்

செப்பிச் சென்றுருள் அடிகளார் தலையாயார் நிரலில் வைத்தெண்ணத் தக்கவர். கடவுள் நெறிப்பாடல்கள் மாசற்ற முறையில் கன்னித் தமிழிற் காணப்படுவன ஆசற்ற புலவோர்க்கெல்லாம் அள்ளூறும் சுவை பயத்தல் ஒருதலை.

திருவாசகம் தீந்தமிழ் இலக்கியங்களுள் ஒன்றுகும். எண்ணத்தின் எழுச்சியை வண்ணத் தமிழில் வடித்துத் தருவோன் இலக்கிய ஆசான் அல்லது கவிஞன் என்று துணியலாம். அவ்வெண்ணம் ஒருவனும் ஒருத்தியும் கூடலும் ஊடலும் கொண்டு வாழும் வாழ்க்கையைப் பற்றியாதல், இயற்கையன்னையின் எழிலிய தோற்றம் பற்றியாதல், கேடுண்டபின் பாடுகளைந்து, பீடுகொண்டானைப் பற்றி யாதல், அங்கிங்கு எனுதபடி பார்க்குமிடமெங்கும் நீக்கமற நின்று யார்க்கும் மூலனுய். முதல்முடிவற்ற தத்துவங்கடந்த முழுப்பொருளைப் பற்றியாதல் எழலாம் என்பது அறிவறமாகும். இனி உலகியலுற வுற்று அலகிலா நிகழ்ச்சிகளை அழியும் வாழ்க்கையிற் கண்ட மாணிக்க வாசகர், நானிலத்திற் பிறந்தார், கிடந்தார், செய்தார், நரைத்தார், மறைந்தார் என்று சொல்வாய் கழிக்கின்றதறிந்து, ஆறறிவுற்ற மக்களாய்ப் பிறத்தலாற் பெற்றிடும் பயன்தான் என்னை ? மன்பதை உலகில் மக்களின் கடன் எதுவாதல் தகவுடைத்து? யாவெலாம் கொண்டு, யாவெலாம் ஒரீஇ, தாவிலா நெறியில் வாழ்தல் வேண்டும்? வழுவாயுற்றவர்க்குக் கழுவாயுண்டா? என்பன போன்ற விஞக்களைத் தாமே எழுப்பி, தமது உலகியலறிவானும், நூலறி வானும், இறைமை நெறியாலெய்தப்பெற்ற அருளறிவானும் ஒள்ளிய கோள்களை யெல்லாம் உள்ளி உள்ளித் தெள்ளித் தேர்ந்து அருந் தமிழ்ப்பாக்களாக அள்ளியள்ளி நம்மவர்க்கு அளிப்பாராயினர்.

Devotional Literature என்று ஆங்கிலத்திற் கூறப்பெறும் இறையன்புப் பாக்கள் பிறமொழிகளிற் காணப்படு மவையிற்றின் எத்துணையோ சால்புடையவை. நம்மொழியிற் காணப்பெறுவன என்னும் கோள்சார்ந்த மேற்புலத்துப் போப்பையர், பிரடெரிக் எயிலர் போல்வார் திருவாசகத்தை அதர்ப்பட யாத்து அளப்பிலா மகிழ்வும், கிளத்தற்கரிய மெய்ப் பொருளுணர்வும் எய்திச் சான்றுர் என்பது நம்மெல்லவர்க்கும் நயப்பும் வியப்பும் நல்குதல் ஒருதலை.

இனி, அடிகளார் முழுமுதற் பொருளை மெய்யுணர்விஞல் ஓர்ந்து அப்பொருட்குக் கூறும் இலக்கணங்களுட் சிலவற்றை எடுத்துக் காட்டுகின்றேம். இறைவன் முதல்முடிவற்றவன்; பெற்றோர் அற்றவன் என்னும் பெற்றியை

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி" (திருவெம்-1)

"தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி" (திருச்சாழல்)

என்னும் அடிகளால் குறிக்கின்றுர். ஆகலால் முழுமுதற் பொருள் பிறப் பிறப்பற்ற பெருமை சான்றது. அம்முழுமுதற் பொருளை "மூவா

முதலாய் நின்ற முதல்வா'' (445) என்று வாயார விளிக்கின்றார். அம்முதல்வனை, "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லான்'' என்று இயம்புகின்றார். அம்முதல்வன் அனைத்துப் பொருட்கும் மூலனாய் நிற்கும் பெற்றிநோக்கி "முழுவதும் இறந்த முதல்வா"(போற்றி அக). "முழுமுதலே'' (379) என்று மொழிகின்றார். இவ்வாற்றாற் கடவுளின் முழுமுதற் றன்மையை விளக்கிப் போந்த அடிகளார், அம்முதல்வன் இயற்கைப் பொருள்களாய் இலங்குமாற்றையும் இயம்புகின்றார். நிலம், நீர், தீ, வளி, வான், உயிர், ஞாயிறு, திங்கள் ஆகிய எண்பொருள் களையும் மெய்யாகக் கொண்டு இறைவன் உயிராக நின்று உலகை இயக்குகின்றான் என்னும் உயரிய கருத்தை

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனது என்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி........'' என வரூஉம் திருப்பாட்டானும்

"நிலம் நீர் நெருப்புயிர், நீள் விசும்பு, நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்''

என்னுந் திருச் செய்யுளானும் உணர்கின்றோம். ஒல்காப் புகழ்சேர் தொல்காப்பியனாரும், "நிலம், தீ, நீர், வளி, விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்'' என்று கூறிப்போந்தனர். இவ்வைம் பெரும் பூதங்களாகவும் இறைவன் இலங்குகின்றான் எனும் இயற்கைக் காட்சியை மாணிக்கவாசகப் பெருந்தகை, "பூதங்கள் ஐந்தாகி'' என்ற திருப்பாட்டிற் பொறித்துப் போந்தனர். இங்ஙனம் இயற்கையாயும் இயற்கையை இயக்கும் ஆற்றலாயும் அப்பாலுக்கப் பாலாய் விளங்கா நின்ற முழுமுதலை உய்த்துணர்ந்து கண்ட தமிழர் தம் மேதக்க மெய்யறிவின் மாட்சியை என்னென்பேம்! இவ்வாறு இயற்கை இலக்கணங்கள் பொருந்திய முழுமுதல் நாம் நுகருதற்குரியவையெல்லாம் அளித்தருளலான், நமது பகுத்துணர்ந்த அறிவால அம்முதலுக்கு நமது அன்பைப் புலப்படுக்குமாற்றால் வணக்கமும் வாழ்த்தும் கூறுதற்குச் சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய நாம் கடமைப்பட்டேமல்லேமோ? அனைத்துமாய் அனைத் திற்கும் அப்பாற்பட்டதுமாய் உள்ள முழுமுதற் பொருளை எவ்வாற்றால் வாழ்த்துவதென்று எண்ணிய மணிவாசகப் பெருமான் "என்சொல்லி வாழ்த்துவனே'' என்று தமது ஏலாமையைக் கூறுகின்றார். பின்றை அடிகளார் அப்பொருளையே எண்ணி எண்ணி ஒருமைநிலை உற்றாராய்,

'செக்கர் போலுந் திருமேனி'
'செம்பொருள் துணிவு'
'செம்மை நலம்'
'செம்மையே யாய சிவபதம்'
'சோதியே சுடரே சூழொளி விளக்கே'

'கடுந்தழல் பிழம்பன்ன மேனிச் செய்யன்'

'ஒளிர்கின்ற ஒளியே'

என்று இயம்புந் திறன் அவர்தம் பண்புற்ற உள்ளத்து இறைதந்த காட்சியின் மாட்சியைக் காட்டுவதாகும். அச்செம்பொருளை

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்றும் வழுத்துகின்றார். தென்னாட்டவர்க்கே சிவ வழிபாடு உரிய தென்னும் உண்மை மேனாட்டு வடமொழி வல்லுநராய மாக்ஸ்முல்லர், மூயிர், பேயிலர், எவபர், ரெகோசின், கிரிபித் போல்வார்க்கும் இந்நாட்டுச் செம்புலமையாளர்க்கும் கருத்தாகு மென்பது தமிழ்க்கடல் மறைமலை அடிகள் விளக்கிப் போந்தமையாற் கொள்ளப்படும். இனி, தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பது இறைவனின் முழுமைத் தன்மையை வியத்தற்காக என்க. அஃதெங்ஙனம் ஒக்குமேனும் பன்னாட்டாரும் தத்தமக்குரிய இயவுளரை ஏத்துதற் காண்டுமாகலின், தென்னாட்டுச் சிவன் எந்நாட்டார்க்கும் இறைவன் என்பது தகுமா என்னில் முக்காலுந் தகுமென்க. என்னை ? முதல் மனிதப் பிறப்பு பண்டொழிந்த குமரிக் கண்டத்தே நிகழ்ந்தமை இற்றைநாள் திகழும் புலனாளர் புகன்றனராக, தென்ன கத்திருந்தே மக்கள் மல்கிப் புறம் போந்தனர் என்பது ஈராசுக்கண் காணியார் போல்வார்தம் துணிவுமாகும். அவ்வாறு பரந்த தமிழர்கள் கொண்ட சிவ வழிபாட்டிற்குச் சான்றுகளாகத் திகழ்வன. * எகிப்து நாட்டில் நைல் ஆற்றங்கரையினிற் கண்டெடுக்கப்பெற்ற சிவக் கொழுந்தும், ஐரோப்பாவிற் கண்டெடுக்கப் பெற்ற நந்திகளும், சிந்துவெளியிற் கிடைத்த கூத்தனின் தொல்வடிவமாம். ஆகலான், தென்னாட்டாரால் உணரப்பெற்ற சிவன் பன்னாட்டார்க்கும் பயன் உய்த்தமையானும், ஐம்பூதங்களாலாய உலகை மெய்யாகவும் தானே உயிராகவும் நின்று இயக்குதலானும், "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று அடிகளார் உரைத்தலை உற்று நோக்கி உவப் பெய்துமின்கள்.

திருவாதவூரர் "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளே. பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்று பழமைக்கும் புதுமைக்கும் இறைவனே காரணன் ஆகலின் அவை யிற்றின் தலைவனும் அவனேயாகும் பெற்றியைப் பேசுகின்றார். இக் கருத்தையே தமிழ்க்கேற்றிக் கூற விரும்பிய கவிஞர் ஒருவர், "முன்னை மொழிக்கெல்லாம் முன்மொழியை முத்தமிழை, இன்னே மொழிக் கெல்லாம் இனிதாம் இளந்தமிழை..." என்று இயல்பு நலம் சிறக்கப் பாடினார். இக்கவிஞரே போற்பிறரும் திருவாசகத்துள் இறைவற்குக் கூறும் எழில் நலத்தினைத் தமிழன்னைக்கும் கூறி இரண்டையும் ஒற்றித்த நிலையிற் கண்டு உவகைக் கடல் குளிப்பர்.

---

* Vide 10—9—1955 தமிழ் நாடு.

முழுமுதலைப்பற்றி ஓவாது உற்றுநோக்கிய அடிகளார் அம் முதலைச் செம்பொருளாகக் கண்ட காட்சியையும் அறிவு வடிவான ஆசிரியனாகி, அணுக்கனாய் எளிவந்து ஒளி தந்து எய்ப்பகற்றி, மெய்ப்பொருளுணர்த்திய மாண்பையும் திருவாசகத்துப் பாக்கள் தெரிக்கின்றன. பல்காலும் தம்முள்ளம் பற்றிய முழுமுதல் தமக்கு இன்பமருளிய பெற்றியைக் கூறுவாராய், "தேனைப் பாலைக் கன்ன லின் தெளிவை ஒளியை" என்றும், "நெல்லிக் கனியைத் தேனைப் பாலை நிறையின்னமுதை அமுதின் சுவையை" என்றும் பிறர் காண்டற்குரிய பொருள்களின் வாயிலாகத் தம் மெய்யுணர்வாற் கண்ட கடவுளின் நிலையைக் காணுதார்க்குக் காட்டுகின்றார். எத்துணைதான் வாயார வாழ்த்தி நிற்கினும் அவ்விறைவற்கு ஒத்த பொருளை உணர்த்தற்கு ஒண்ணுமை யாவர்க்கும் இயல்பாதல்போல, அடிகளார்க்குமாதல் 'ஒப்புனக்கில்லா ஒருவனே' என்று உரைக்கு மாற்றால் உணரப்படும். இத் தகைசான்ற இயற்கைப் பண்புகளை இறைவற்கு ஏற்றிப் பாடிச் சிவப்பேறு எய்திய செம்மலார் தாம் எய்திய பேற்றின் பெற்றியையும் சிவத்தின் முழுமையையும் உல கெலாம் உணர்ந்து, கடைப்பிடித்து உய்யவேண்டுமெனும் உயர் நோக்கால் திருவாசகத் தேனைத் திரட்டியருளினார்.

இத்திருநூலுள் பல பகுதிகளும் சிவனைத் தலைவனாகவும் ஆன்மாவைத் தலைவியாகவும் கொண்டு நயஞ்செறிய நடக்குமாற்றை அகப்பொருட் பாநலம் உணர்ந்து துய்க்கும் ஒட்பமுடையார் விய வாதிரார். இனி, இங்ஙனம் கற்பித்துக் கோடல் பகுத்தறிவிற்குப் பொருந்துமா எனச் சிலர் கடாவலாம். இக்கடாவிற்கு விடையளித் தற்கு முன் 'பகுத்தறிவு' எப்பொருட்டாதல் வேண்டும் என்பதை ஓர்தல் நன்று. சிலர்க்குப் 'பகுத்தறிவு' என்னுஞ் சொல் நூல்களை நோக்குழி அவற்றுட் காணப்பெறுங் கதைகள் புனையப்பெற்றவை ஆகலின் ஒழித்தற் பாலன; நேரிதாகக் கிடைக்கும் உண்மைகளையே பகுத்துக்கோடல் வேண்டும் என்னும் பொருட்டாக; பிறர்க்கு, நூல் களிற் காணப்பெறும் செம்பொருளை நேரிதாகக்கொண்டு கதைகள் உளவேல் அவை எற்றிற்கு எழுந்தன? அவையனைத்தும் வெற் றுரையாமோ? அவற்றால் தெருட்டப்பெற்ற நெறிகள் யாவை? வேண்டப்படுவன யா? என்றெல்லாம் வினாவெழுப்பி ஆய்ந்து அறிவால் விடைகாணும் பண்பாகப் பரிணமிக்கப் பார்க்கின்றோம். எனவே முதற்கண் கூறப்பெற்ற முறையாற் பயிலுநர் இலக்கியத்தைப் பகுத்தறிவுக் கத்தரிக்கோலால் நறுக்கிப் பார்த்துப் படித்தால், தமிழ்த் தாய் அழுவாள்; அன்னையின் அணிகள் சிதைவுறும்; மொழிவளம் ஒல்கத் தலைப்படும். தமிழ்த் தாயை ஓம்புதற்கு முயலுநர் பின்னர்க் கூறப்பெற்ற முறையால் பகுத்தறிவைக் கொள்வாராக. இனி, அரசனைத் தலைவனாகவும் அவன் நாட்டிற் பாயும் யாற்றைத் தலைவி யாகவும் கற்பித்துப் பாடும் முறையைச் சிலப்பதிகாரத்தால் அறிகின் றோம். அம்முறையை இறைவற்கும் உயிர்க்கும் ஏற்றிப் பாடிய அடிகளாரின் வீயாச்சிறப்பை வெளிநாட்டாரும் போற்றிப் புகழு மாற்றை உணரும் பாமும் ஊற்றமும் ஏற்றமும் எய்துகின்றோம்.

வானத்துப் புத்தேளிர் நாட்டில் எய்தப்பெறும் இன்பத்தைப் பற்றியாதல், மண்ணகத்துத் துய்த்தற்குரிய மகிழ்வுப் பொருளைப் பற்றியாதல் பாவலன் பாடுதற்குரியோனாகலான் அவன் தோற்றத் தானும் கொள்கையானும், பழக்கத்தானும் எத்துணைதான் துவரத் துறந்த துறவியாகக் கருதப்படினும் இயல்பாகவே இல்லறத்தின் இன்பத் தன்மையை உணர்ந்தோனாக ஒளிருகின்றான் என்பது ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர் பாஸ்பர் மல்லம் என்பார் தம் கொள்கையாம். இவ்விலக்கணத்துக்கு முழுமையு மொத்தலான் அன்றோ மணிவாசகப் பெருந்தகையார் விழுமியது பயக்கும் திருவாசகப்பாக்கள் பலவற்றையும் அகப்பொருட் முறையிற் பாடினார்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவப் பெருந்தகையும் திருவாத ஊரரும் எத்துணையோ இடங்களில் ஒத்து நடக்கின்றனர் வாலாமையைச் செகுக்கும் வாலறிவின் வடிவாக வயங்கும் இறைவனின் திருவடிகளை வணங்கமாட்டாதார் தாம் பயின்ற கல்வியறிவாற் பெற்றிடும் பயன்தான் என்னையோ? தமக்குமேற் றலைமைப் பொருளாய் இலங்கும் இறைவனை இறைஞ்சுதற்கு வழிகாட்டாத கல்வி நூல்கள் உண்மைப் பனுவல்களாகுமா? இறைவனைப் பணிதற்கு ஆற்றுப் படுத்தா நூல்களைக் கற்பார் தாம் கற்றதனாலாய பயனென்னை? என்பன போன்ற பொருள்கள் பொதுளிய திருக்குறளை நம்மெல்லவரும் நண்குணர்வோம்.

"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"


இனி, இக்குறளினை உட்கொண்ட மாணிக்கவாசகர் திருவாசகத்துட் பல்லிடத்தும் கடவுளை வழிபடற்குத் துணைசெய்யாக் கல்வி கல்வியல்ல என்னும் கருத்துத் துதைந்த பாக்களையும் வழங்கியுள்ளார். கல்வி பலபாற் படுதலின் அடிகளார் "கல்வியென்னும் பல்கடல்" என்று குறித்தார். இங்ஙனம் பலபாற்படும் கல்வியின் ஒவ்வொரு கூறும் தனித்தனி கடல் ஒக்கும். இக்கல்வி 'கரையில' என்று நாலடிச் செய்யுளும் நவிலுதல் காண்க. எண்ணிகந்த இடுக்கண்களினின்றும் தப்பிய வாதவூரர் தமது போற்றித் திருவகவலில், "கல்வியென்னும் பல்கடற் பிழைத்து ......... தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி" என்னுமிடத்து "கல்வியென்றுரைக்கப்படும் பலவாகிய கடலினின்றும் தப்பியும் ...... கடவுள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாகிய ஒரு கருத்து வரப்பெற்றார்" எனப் பொருள் விரிக்கும் உரையாசிரியர், அடிகளார் அறிவுநூற் கல்வியே கொண்டனர் என்றும் குறிக்கொளுவினர். ஆகலான், இக்கல்வி கற்றதனாலாய பயன் கடவுள் வழிபாடாற்ற உந்தியவாறு காண்கின்றேம். இக்கல்வியே வள்ளுவரால் 'கேடில் விழுச் செல்வம்' என்று கூறப்பெறும். இவ் விழுச் செல்வம் செல்வத்துட் செல்வமாய அருட்செல்வம் அளிக்க வல்லது. வாலறிவன் நற்றாளைத் தொழற்கு உள்ளத்தை உந்தும் கல்வி அறிவுநூற் கல்வியே என்க. இனி வள்ளுவப் பெருந்தகையார் 'வாலறிவன்' என்றது தூய அறிவான கடவுளையாகலின், பன்னெறியாளரும் கடவுளை அறிவான தெய்வமே என்று கூறுதல்போல்

வாதவூரரும், "அறிவாம் தேற்றனே"; "மெஞ்ஞானமாகி மிளிர் கின்ற மெய்ச்சுடரே அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவே", "அறிவே போற்றி"; "அறிவனே" என்று தெரிந்து தெளிவிக் கின்றார். எனவே வள்ளுவப் பெருந்தகை கூறுமாறுபோல வாத வூரரும் கல்வி, அறிவான இறைவனை வழிபடற்கு ஏதுவாக அமை தலே சால்புடைத்தென்று கூறியது உய்த்துணர்ந்து துணியப்படும்.


அஃதங்ஙனம் ஒக்குமேனும், "கல்லார் நெஞ்சின் நில்லான் ஈசன்" எனக் காழியூர்ப் பிள்ளையும், "கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக் கற்றார்கள் உற்றோருங் காதலானை" எனச் சொற் கோவும், "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை" எனச் சேந்தனு ரும் கற்றார்க்கே கடவுள் புலனுவான் என்று புகன்றனராக மாணிக்கவாசகப் பெருந்தகை "கற்றாரை யான் வேண்டேன், கற் பனவும் இனியமையும்" என்றுரைத்தது ஏற்புடைத்தா? என்னில் ஏற்புடைத்தே என்க. என்னை? ஈண்டுக் கற்றாரை என்று வாதவூரர் குறித்தது வாலறிவன் நற்றாளை வழுத்தற்கு உய்க்காத நூல்களைக் கற்றாரை என்று கொள்க. அங்ஙனம் கற்றார்தம் கல்வி நன்மை பயவாதென்னும் வள்ளுவர் கொள்கையே வாதவூரரும் கொண்டன ராகலின் "கற்றாரை யான் வேண்டேன்" என்றது பொருந்து மென்க. அற்றேல், கற்றாரை யென்னற்குச் சமய நூல்களை யெல்லாம் கற்றாரை என்றும் கொள்க. அதுவேயுமன்றி, கடவு ளுண்மையை மறுக்கும் மீமாஞ்சை நூற்களைக் கற்றாரையென்றுங் கொள்க. இக் கற்றரெல்லாம் தாம் கொண்ட கோட்பாடுகளை நிலை நிறுப்பான் வேட்டுத் தமது மதிநல மதுகையால் வாதில் முனைகின் றார் ஆகலின், அவர்க்கெல்லாம் வாதில் வாகை சூடுதலே வாழ்க்கை யின் குறிக்கோளாக, அவ்வாகை அணிதற்குரிய வகையில் தமது இறைவனைப்பற்றி எண்ணுதொழிகின்றனர். இத்தகைய கற்றாரிற் "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்" எனப் பிறண்டும் தாயுமானுர் கூறியது நோக்குமின்கள். இனிக் கல்லார் கடவுள் வழிபாட்டில் திறம்பாத காழ்த்த உள்ளத்தாராய் நிற்றற் காண் கின்றேமாதலின் அன்னார் வாலறிவன் நற்றாளைத் தொழாக் கல்வி யாளரினும் நனி நல்லார் எனுங் கொள்கையைத் தாயுமானுர்க்கு முன்பே உணர்ந்த அடிகளார், 'கற்றாரை யான் வேண்டேன்' என்று தெரித்தார் என்க. இனி, 'கற்பனவும் இனியமையும்' என்றது கல்வி கரையற்றது; பல துறைகளின்பாற் பரந்திலங்குவது; ஒன்றைக் கற்குங்காலைப் பிறிதொன்றற்கு உள்ளத்தை ஈர்த்து நிற்றலின், முழுமுதற் கடவுளை வணங்குதற்கு முடியாதாகின்றதாக லின், இதுகாறும் யாம் கற்ற கல்வி இறைவனை ஓரற்கும் உற்றறிந்து உணர்தற்கும் வழிபடற்கும் வாய்ப்பது; இனி யாம் கற்ற வழியில் நிற்றல் வேண்டும். ஆகலான் இனிக் கற்பனவும் அமைவுறும் என உணர்த்துதல் காண்க. இதுகாறும் எழுதியவற்றால், வினையின் நீங்கி விளங்கிய அறிவுற்ற கடவுளை வழிபாடாற்றுதற்கு உய்க்கும் கல்வியே பயனுடைய கல்வி என்பது வள்ளுவப் பெருந்தகைக்கும், வாதவூரருக்கும் உடன்பாடென்பது கண்டோம். (தொடரும்)



கரந்தைப் புலவர் கல்லூரியிற் பயிலும் ஏழை மாணவர்க்கு
உணவளித்தற்காக 22 ஏக்கர் நன்செய் நிலத்தை
நிலைத்த அற ஏற்பாடாகப் பதிவு செய்துள்ள பெருமகனார்
தென்னங்குடி, திரு. நா. சுந்தரராச நாட்டார் அவர்கள்.



கரந்தைத் தமிழ்ச் சங்க 49-ஆம் ஆண்டு நிறைவு
விழாத் தலைவர்
செந்தமிழ்க் காவலர், பேரறிஞர்
**அ. சிதம்பரநாதன் செட்டியார்**, எம். ஏ., பிஎச். டி., எம். எல். சி.,
(சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சொற்களஞ்சியத்
தலைமையாசிரியர்)



கரந்தைத் தமிழ்ச் சங்க 49-ஆம் ஆண்டு நிறைவு விழா
இரண்டாம் நாள் தலைவர்
முத்தமிழ்க் காவலர்
**திருச்சி, கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்.**